Vol-1.] JULY-1911. [No. 11.

REGISTERED.

# THE GNANAPIRAKASAM.

A MONTHLY JOURNAL DEVOTED TO RELIGION, LITERATURE SCIENCE &c

# ஞானப்பிரகாசம்.

கல்லார்நெஞ்சுறிவெண்ணைநல்லூர்ச்சிவாலயத்துப்
பொல்லார்தாள்யாஞ்சூடும்போது.

யாழ்ப்பாணத்திற் பிரசுரமாகும்

## ஒரு மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை.

புத்தகம்-க. யாழ்ப்பாணம்:— விரோதிகிருது ௵ ஆனி ௴. இலக்கம்-கக.

## விஷயசூசிகை.


| | |
|---|---|
| மாகம் | அ. குமாரசுவாமிப்புலவர் |
| திருவாதவூரர்புராணம் | மகாவித்துவான். ஆறுமுகம்பிள்ளை. |
| கமலாம்பிகைசரித்திரம் | மா. சிவராமலிங்கம்பிள்ளை. |
| முருகக்கடவுளும் மூர்த்திலிங்கசையும் | ” |
| தலயாத்திரைப்பிரயாணவிதி | சி. இ. சாமிமுத்து உபாத்தியாயர் |
| பெண்கள் கல்வி | அன்னபூரணீஸ்வரி |
| நூலாசிரியர்கள் கருத்தொற்றுமை | பத்திராதிபர் |
| மகுடாபிஷேகக்கொண்டாட்டம் | ” |
| கடன்கோடல் | ” |
| சிலகுறிப்புகள் | ” |
| நல்வெண்பாஉரை | ” |
| புத்தகவரவு | ” |
| பத்திரிகைவரவு | ” |
| ஆட்களைப்பற்றியகுறிப்புகள் | ” |
| சமாசாரம் | ” |


B. M. A. Sanmugaretna Sarma Editor & Proprietor.

ஆ. சண்முகரத்தினசர்மா பத்திராதிபர்.
யாழ்ப்பாணம் "கணேச" யந்திரசாலை.

JAFFNA CHUNNAKAM

குமாரசுவாமிப்புலவர் நூலகம்
புலவகரகம்,
மயிலணி : : சுன்னாகம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது ஞானப்பிரகாசத்தைப்பற்றி

மகாவித்துவான்
சே. சோமசுந்தரப்பிள்ளையவர்களிடமிருந்து

கிடைக்கப்பெற்றது.

---

தங்களாற்பிரசுரஞ்செய்யப்பட்டுத் தமிழ்நாடெங்குஞ் சென்று உலவித் தமிழரையும் வைதிகசைவரையும் களிப்பியாநிற்கும் "ஞானப்பிரகாசம்" என்னும்பத்திரிகை வாயிலாக, நன்மையைத்தரும் பற்பல விஷயங்களை யாவருமறிந்துய்ய ஒண்டீந்தமிழில் எழுதி வெளியிட்டுவருவது தமிழ்ப்பிரபஞ்சத்திற்குச் செய்கின்றதோர் பெரும் புண்ணியமேயாம். தமிழ்மணங்குன்றிய இக்காலத்தில் தமிழ்மணமே நன்கு கமழப்பெறும் "ஞானப்பிரகாசம்" என்னும்பத்திரிகைதோன்றி நிலவுதற்குக்காரணம் தமிழர்செய்த நற்றவமேயென்று கூறல்வேண்டும். ஸ்ரீலஸ்ரீ. சபாபதி நாவலரவர்கள் வெளியிட்டுவந்த "ஞானாமிர்தம்" என்னும் அரியபத்திரிகை மறைந்தபின்னர் அதனை யொப்பதோர் பத்திரிகையைப் பெறாது வருந்தியிருந்த இத்தமிழுலகிற்குத் தாம் இப்பத்திரிகையைத் தந்து அத்துயரினை நீக்கியதற்காகத் தங்கட்குப் பெரிதுங்கடப்பாடுடையேம். இப்பத்திரிகையிலடங்கிய 1. கடவுளியல்பு. 2 பத்திரிகை 3. சைவபோதம் 4. தொல்லாசிரியர்செய்யுளழகு 5. தமிழ்வசனநடை 6. தமிழ்மொழி 7. சீவகசிந்தாமணி ஆராய்சி 8. திருமுருகாற்றுப்படை ஆராய்ச்சி என்னும் அரியவிஷயங்கள் தமிழ்கற்போர்க்கும் கற்பிப்போர்க்கும் பெரும்பயனைத் தாராதொழியாதென்பது திண்ணம் திண்ணமே. அரும்பெரும் விஷயங்களைத் தன்னிடங்கொண்ட இந்நற்பத்திரிகை என்றும் இத்தமிழுலகில் நிலவுற முழுமுதற்கடவுளாய நச்சினார்க்கினியாரய்விளங்கும்பரசிவத்தின் திருவருளைப்பிரார்த்திக்கின்றோம்.

இங்ஙனம்,
சே. சோமசுந்தரப்பிள்ளை,
சென்னை.

---


**கமலாக்ஷி!!** (படங்களுடன்)

**விஜயசுந்தரம்!!** (படங்களுடன்)

இவ்வரிய கற்பனை கதைகள் இரண்டும் ஆங்கிலநாவல்களின் போக்கை யனுசரித்துப் படிப்பவர் மனதைக்கவரும்வண்ணம் இரங்கூன் பேப்பர் கறன்சி ஆபீஸ்பொக்கிஷதாரர் ஸ்ரீமான். T. M. பொன்னுச்சாமிப்பிள்ளை அவர்களால் எழுதப்பட்டன

கமலாக்ஷி 2 பாகமும் கலிக்கோ ரூபா 2—0—0 ராப்பர் 1—8—0
விஜயசுந்தரம் டி ,, 2—0—0 டி 1—8—0
கமலாக்ஷி 1ம் பாகம் 0—13—0 (ராப்பர்) 2ம் பாகம் 0—13—0
விஜயசுந்தரம் டி 0—13—0 ( டி ) டி 0—13—0

வேண்டுவோர் பின்கண்ட விலாசத்துக்கெழுதுக

தி. ம. பொ. முத்துக்குமாரசாமிப்பிள்ளை,
61ம் நெ வீடு 48ம் நெ தெரு ஈஸ்டுரெங்கூன்,
Rangoon.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானப்பிரகாசம்.

"தோட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறு மறிவு."    திருக்குறள்.

மாதம் ஒருமுறை பிரசுரமாகும்.

புத்தகம்-௧.    யாழ்ப்பாணம்:—விரோதிகிருது௵ ஆனி௴.    இலக்கம்-௧௧.


உ
கணபதிதுணை.

மந்திரநான்மறையாகிவானவர்
சிந்தையுணின்றவர் தம்மையாள்வன
செந்தழலோம்பியசெம்மைவேதியர்க்
கந்தியுண்மந்திரமஞ்செழுத்துமே.

## தமிழ்த்தெய்வ வணக்கம்.

மறைமுதற் கிளந்த வாயான்
    மதிமுகிழ் முடித்த வேணி
யிறைவர்தம் பெயரை நாட்டி
    யிலக்கணஞ் செய்யப் பெற்றே
யறைகடல் வரைப்பிற் பாடை
    யனைத்தும்வென் றாரி யத்தோ
டுறழ்தரு தமிழ்த்தெய் வத்தை
    யுண்ணினைந் தேத்தல் செய்வாம்.

# ஞானப்பிரகாசம்

## மாகம்.

(௧௬௦-ம் பக்கத் தொடர்ச்சி)

மாகத்திலே இரண்டாஞ் சருக்கத்திலே கிருஷ்ணர், பலராமர், உத்தவர் என்னும் மூவருஞ் செய்த ஆலோசனையும், அவரவர் அபிப்பிராயங்களுங் கூறப்படுகின்றன.

சிசுபாலனைக் கொலைசெய்தருளவேண்டும் என்று நாரதமகாமுனிவர் வாயிலாக இந்திரனாற் பிரார்த்திக்கப்பட்ட கண்ணபிரான் சந்தேகங் கொண்டார். யாதுசந்தேகங்கொண்டார்? சேனைகளோடுபோய்ப் போர்புரிந்து சிசுபாலனைக் கொல்லுதல் தேவகாரியம். தருமருடைய இராயசூய யாகத்துக்குப் போய் நடத்துதல் மித்திரகாரியம். இந்த இரண்டுகாரியமும் ஒருகாலத்திலே வந்து நேரிட்டிருக்கின்றன. இவற்றுள்ளே தேவகாரியமா? மித்திரகாரியமா? எந்தக்காரியம், யாம் அவசியம் செய்யவேண்டியது? என்றுசந்தேகங்கொண்டார். கொண்டபின் ஆலோசனைசெய்து சந்தேகந் தீர்த்தற்பொருட்டு தமயன்மாராகிய பலராமர், உத்தவர் என்னும் இருவரையும் ஒரு தனியிடத்திலே வருவித்தார். வருவித்தபின் அவர்கள் கருத்தறிந்து ஐயந்தீரும் பொருட்டுத் தமது கருத்துக் கூறுவாராயினர்.

கண்ணபிரான் அவ்விருவரையும் நோக்கிப் பெரியோர்களே! நாம் இப்போது பேசுவது உங்களுடைய எண்ணமாகிய முடிவை அறிதற்கன்றி வேறொன்றின் பொருட்டன்று. திக்குகளையெல்லாம் வெல்லவல்ல வீமன் முதலியோர் தருமபுத்திரருக்குத் துணைவர்கள். தருமபுத்திரர் நாம் போகாமல் விட்டாலும் அந்த யாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

த்தை முடித்தற்குவல்லவராயிருக்கின்றார். ஆதலால் அதற்குப் போவது அவசியமன்று. சிசுபாலனே நமக்குப் பகைவன்; நமக்கு அபராதஞ்செய்கின்றான். அதற்காக நாம் துயருற வில்லை. உலகத்துக்கு அதிகந் துயர்செய்கின்றான். அதற்காகவே நாமுந் துயருறுகின்றோம். ஆதலின் அவனைக்கொல்லச் செல்லுதலே அவசியகாரியம். உங்கள்கருத்தை நீங்கள் கூறும்வரையும் நாம்சொன்னது சித்தாந்தமாயிருக்கும் என்று முடித்தார். அதன்பின் பலராமர் கூறுவாராயினார்.

கண்ணபிரான் கூறியது சுருக்கமாயினும் சூத்திரம்போன்று விரிந்த பொருள்களை அடக்கியிருக்கின்றது. நாமும் அவர்கூற்றைத் தழுவி வியாக் கியானம் போலஅதனை விரித்துப் பேசுவாம். போர்க்குப் போவோர் ஔசனம் என்னும்நூலிற் சொல்லப்பட்ட அறுகுணங்களையும், மூன்றுசத்திகளையும், அவற்றின் சித்திகளையும், உதயங்களையும் அறிதல்வேண்டும். ஆலோசித்துச் செய்யும்படி நிச்சயித்த காரியத்திலே தாமசஞ் செய்யலாகாது கிருஷ்ணரே! இந்தச்சிசுபாலன் உமக்கு இயற்கைச் சத்துருவன்றிச் செயற்கைச் சத்துருவாயும் இருக்கின்றான். உருக்குமணி விஷயத்திலே உம்மிடத்தில் அவனுக்கு அதிகவைரம் உண்டு. நீர் நரகாசுரனைக் கொல்லப் போனபோது உமது துவாரகையை முற்றுகைசெய்தான். வப்புரு என்பவனுடைய மனைவியைக் கவர்ந்தான். இவன் இப்படியே பின்னும் பின்னுந் தீங்குசெய்தலாற் பொறுத்துவிடத்தக்கவனல்லன். இந்தச் சிசுபாலனோடு சாமமாகிய இனிய சொற்கூறுதல் சுரநோய்க்குத் தண்ணீர் தெளிப்பது மேலுந் தீங்கை விளைக்கும். இவனைக் கொல்லுதற்குச் சேனைகளோடு போகவேண்டும்.

சிசுபாலனுடைய நண்பனாகிய சராசந்தனும் வீமனாற் கொல்லப்பட்டுப்போனான். இப்போது அவன்துணையில்லாதவன். இது அவனைக்கொல்லுதற்கு ஏற்ற காலம். யாதவர்களெல்லாம் சிசுபாலனுடைய மாகிஷ்மதிநகரத்தை முற்றுகை செய்க. தருமபுத்திரர் யாகஞ்செய்க. இந்திரன் தேவுலகைக் காக்க. சூரியன் பிரகாசிக்க. நாமெல்லாம் பகையைக் கொல்க. இராயசூயத்துக்குப் போவதைவிடுக. என்றிவ்வாறே பலராமர் பலபல கூறிமுடித்தார்.

வரும்

இங்ஙனம்.

அ குமாரசுவாமிப்பிள்ளை.

சுன்னாகம்.




மகாமகத்துவ காருண்ய உத்தமோத்தம

ஐந்தாவது ஜோர்ச்

## சக்கரவர்த்தியாரது

1911 ௵ ஆனி ௴ 22 உ நிகழ்ந்த

மகுடாபிஷேக மகோத்ஸவக்

கொண்டாட்டமும் கந்தரோடையும்.

இந்தக்கொண்டாட்டம் சென்ற 22உ வியாழக்கிழமை பகல் கந்தரோடை இங்கிலிசு வித்தியாசாலையிலும் வெகு சிறப்பாக நடந்தது. வித்தியாசாலைத் தாபகராகிய ஸ்ரீமான். சி. கந்தையபிள்ளையவர்களும், உபாத்தியாயர்களும், பிறருஞ்சேர்ந்து அதிகம் அலங்காரமான பந்தலொன்று அமைப்பித்து வைத்திருந்தார்கள். க மணிவரையிலே அந்தப்பந்தலிலே பலரும் வந்து கூடினார்கள். அதன்பின் யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டிஸ்த்திறிக்கோட்டு நீதிபதியும் வந்தனர். நீதிபதியை ஸ்ரீமான் அப்புக்காத்து கனகசபைப்பிள்ளை, ஸ்ரீமான். பிறக்றர் பொன்னம்பலபிள்ளை ஸ்ரீமான் டக்றர் மழவராயபிள்ளை முதலிய உத்தியோக புருடர்களும், உபாத்தியாயர்களும். மாணாக்கர்களும் மேழவாச்சிய முழக்கத்தோடும். விருதுக் கொடியோடும் எதிர்கொண்டு சென்று உபசரித்து அழைத்துவந்து அக்கிராசனத்தில் இருத்தினார்கள்.

நீதிபதி அக்கிராசனத்தில் இருந்தபின் தேவாரம் ஓதப்பட்டது. அதன்பின் ஸ்ரீமான் பொன்னம்பலபிள்ளையவர்களால் நீதிபதிக்கு வந்தனோபசார வார்த்தைகூறப்பட்டது. அதன்பின் தலைமையுபாத்தியாயர் ஸ்ரீமான். பொன்னையாப்பிள்ளையவர்களால் வித்தியாசாலையின்வரலாறு கூறப்பட்டது. அதன்பின் மேழவாத்தியகோஷமும், வீணைகான மத்தளசங்கீதகோஷமுஞ் செய்யப்பட்டன. அதன்பின் அரசவாழ்த்தும் மகுடாபிஷேக வாழ்த்தும் படிக்கப்பட்டன. அதன்பின் நீதிபதி எழுந்து மாணாக்கர்களுக்கும் சபையாருக்கும் பயன்படத்தக்க பலவிஷயங்களையும் விளக்கமாக எடுத்துக்கூறினார்.

அதன்பின் ஸ்ரீமத். அ. குமாரசுவாமிப் புலவரவர்கள் எழுந்து சிலகுறிப்புரை கூறினர். அதன்பின் நீதிபதி அவர்களுக்கு அப்புக்காத்து ஸ்ரீமான். கனகசபைப்பிள்ளை அவர்களால் நன்றிஅறிதலை விளக்கும் வந்தனோபசாரவார்த்தைகள் விரித்துக்கூறப்பட்டன. பின்னர் யாவரும் சந்தனம் தாம்பூலம் பன்னீர்முதலியவைகளால் உபசரித்து அனுப்பப்பட்டார்கள்.

மகுடாபிஷேக மங்கலவாழ்த்து.
கட்டளைக்கலித்துறை

இன்பங்கொடுக்கும்பொறைகல்விசெல்வமிசைகொடுக்குந், துன்பந்தவிர்ந்த முறையுங்கொடுக்குஞ்சுகங்கொடுக்கும், வன்புங்கொடுக்கும்சமயம்வளர்க்கும்வலிகொடுக்கும், அன்புங்கொடுக்குநல் ஜோர்செனுமன்னனரசியலே,

தங்குங்குடிகளெவையும்விரும்புஞ்சமயநிலே, பொங்குஞ்சபைகளெவையும்விரும்பும் பொதுநன்மைசேர், சங்கம்விரும்பும்பிறமன்னர்சேரஞ்சபைவிரும்பும், எங்கள்புரவலன்ஜோர்ச்செனுமன்னனையிந்நிலத்தே.

எண்சீர்விருத்தம்.

திங்களெனக் குளிர்ச்சிதருஞ் செங்கோ லாளன்
தேசமெலாஞ் சமாதானந் தேடுங் கோமான்
செங்கதிரோ னத்தமியா மண்ட லேசன்
செந்தண்மை பூண்டுகுடி யோம்புஞ் சீமான்
அங்கிலபூ மிக்கரசன் வாய்மை யாளன் (ண்ட
அறிவுடையோன் பொறையுடையோன் பரதக
மங்கலசக் கரவர்த்தி ஜோர்ச்சு மன்னன்
மனைமேரி யம்மையுடன் வாழி வாழி.

துங்கமறை யோர்வாழி பின்னோர் வாழி
தூயபசு நிரைவாழி முகில்கள் வாழி
பங்கமிலா துயர்சைவ சமயம் வாழி
பாவையர்க டமதுபதி விரதம் வாழி
அங்கிலபூ பதிஜோர்ச்சு மன்னன் வாழி
அரியவளஞ் செறிகந்த ரோடைமேவும்
இங்கிலிசுக் கல்லூரி வாழி வாழி
ஈசர்துணை யரசர்துணை எய்தி வாழி.

இது எமது தமிழாசிரியர் சுன்னாகம் ஸ்ரீமத். அ. குமாரசுவாமிப் புலவரவர்களாற் பாடப்பட்டது. பின்னும் பலவித வினோதங்களும், மாணவர்க்குப் போசனாதிகளும் நடாத்தப்பட்டன. ௪ மணியின்மேல் மாணவர்களும், உபாத்தியாயர்களும், ஸ்ரீமான். டக்றர் மழவராயபிள்ளை முதலியவர்களும் மங்கலவாச்சியத்தொனிமுதலியவற்றோடு தெருவீதி வந்து சுன்னாகம், மல்லாகம் முதலிய இடங்களிலே உபசரிக்கப்பெற்று மல்லாகங் கோட்டிலே மணியகாரர் நடாத்தும் கொண்டாட்டச்சபையிலே போய் உபசரிக்கப்பெற்றார்கள்.

ஸ்ரீமான். கந்தையபிள்ளை, ஸ்ரீமான். டக்றர் மழவராயப்பிள்ளை ஸ்ரீமான். பிறக்றர் பொன்னம்பலபிள்ளை, முதலியோரும், உபாத்தியாயர்களும், மற்றையோர்களும் இந்த இராசவிசுவாசக் கொண்டாட்டத்திலே அதிகம் முயற்சியுடைய

குமாரசுவாமிப்புலவர் நூலகம்
புலவகரகம்,
மயிலணி : : சுன்னாகம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராய் இருந்தார்கள். சபையில் வந்திருந் தோர் யாவரும் அதிகஞ்சிறப்பாக இநதக் கொண்டாட்டத்தை நடத்திஞர்கள் என் றுபேசிக்கொண்டார்கள்.

ஷை காட்டிய பரோபகார உத்தியோ கபுருடாகளும் ஆங்கிலேயவித்தியாசாலை யும் இராசவிசுவாசமும் இன்றுபோலென் றும்வாழப் பிரார்த்திக்கின்ரும்

(ப—ர்)

---

மங்கையர்க்கரசியேன்னும்

# கமலாம்பிகை சரித்திரம்.

(களC-ம் பக்கத் தொடர்ச்சி)

---

இராகம்—கேதாரளம்—தாளம்—ஆதி.

போதும்பர்ச்சிறப்பு.

பல்லவி.

அந்தமிருந்தஇந்த நந்தவனத்தைவர்ணிக்க
ஆதிசேடனலாகுமோ

அநுபல்லவி.

கொந்துலவவேயெங்கணும்
பந்திபந்தியாய்நிறைந்து
குவிந்து வளர்ந்து மலர்ந்து நிமிர்ந்து
கவிந்து குளிர்ந்து வளங்கள் செறிந்து அந்

சரணம்.

மேனுளில்வானோர்களு
மேமாறிவாதாடு
மேலானபாரிஜாதம் மலர்
விகசிதமாயொடுமெதுவுணவேவரு
யளியவைபாடுகீதம்
மேதாவிகவியெனவேபாடுபுலவரு
மேபாடவேதகாதம் மிகு
விரவியவடுவொடுமிலகியதளிர்நிரை
யழகியலானசூதம்
விண்டலம்வரையுயர்ந்து
கண்டவரெல்லாமகிழ்ந்து
விளங்கியிலங்கி யொழுங்கிலமர்ந்து
களங்கமகன்றமணங்கள் கவர்ந்து
விலகளவருமண மிலையெனவனுதினம்
உலவிவரவிதோ நலமெனமொழிய
பலபலசொலமிக அந்
புன்னைபாதிரிகோங்கு
முன்னலேதோனுதுதெங்கு
இன்னளிலேயசோகம் மதன்
போராடவேயனலம்புநேராகயீயவரும்பு
சேராகுதேயனேகம்
பொன்னரு மமரரின்
நன்றுடுதருவனமென்றுமிதேயமோகம்-சிறு
பூலாவுமயினுதிவேலாவுநிறைபெற
கோலேறியோடுபூகம்
துன்னியவிந்தச்சோலைகூடி
மன்னியபட்சிவானம்பாடி
நன்னயமுற்றுவோடுமேகம் கண்டு
தோகைமீதுகண்ணுளச் சித்திர
மானதாருமைஞ்ஞைகளின்று
தோணஆடலோடுகோகம்
மின்னரும் நாணமதுற்று
மேவாடவேமொழிதத்தை
இம்வாழுமேலபாகம் குள
மீனுடிவாடியிருந்துவிக்காத முக்கிய கொக்கு
மேடேறியோடுதேகம்
பலபலநிறமுளசிறகுளபறவைக
ளலவிடுமெழகியவவையொடுநடைபெற
புகலரிதெனவருமேகபோகம் யது
பாரிடமீதினிலீலதியாகியமாமென
நாடியதேமனமீளவுமேபுளகாங்
கிதமானதேகம்
வாரிசமலருளவாவிகளிடையிடை
வாகியபரிமளமாகியசுமணவாசனைகளேதர
வனிசாகரிகம்
வந்துதந்திடு மிந்தவிந்தைகள்
மனமுவந்திடு கனமிருந்தன
மங்கலந்தருமாவிவேகம்
எங்கெங்குமிணைநிகரேதேதுகிடையா
இந்தநற்றினமே
கந்தமுற்றதிக
சுந்தரத்துடன். அந்தமி

இவ்வாறு நந்தனவனத்தின் சிறப்புக்களெ ல்லாவற்றையும் கமலாம்பிகையானவள் வியந்து சேடியருக்குக் கூறி உலாவி வரும்பொழுது, அவ ர்கள் அவளை அழைத்துக் கொண்டுபோய் ஒரு அ சோகவிருக்ஷத்தின் கீழ்தங்கும்படிசெய்து சிறிது நேரம் இளைப்பாறி விநோதமாகவார்த்தையாடிக் கொண்டிருந்தார்கள். இது நிற்க

இங்கே இவர்கள் சந்தோஷத் தோடிருக்க சத்திரத்தில் வியாபாரிவேடங் கொண்டிருந்தகரு ணகர பூபதியானவன், கமலாம்பிகையைக் காணு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தல் வேண்டுமென்னும் எண்ணங்கொண்டு, நாம் அவளைக்காணுவது எப்படி? கன்னிகாமாடத்தில் இருக்கும் இராஜகுமாரியைக் காணுவது கஷ்டமல்லவா எனயோசித்து தான்கொண்டிருந்த வாசனைத்திரவிய மூட்டையைக் கையிலெடுத்துக் கொண்டு அரண்மனைப்பக்கமாகவந்தவன்வழிதப்பிஇராசகுமாரி இருக்குமந்தனவனத்துக்குவந்து அகஸ்மாத்தாய் நக்ஷத்திரங்களுக்கிடையே விளங்கும் பூரணசந்திரனைப் போலச் சேடியர்களுக்கு மத்தியிற் காணப்பட்ட தத்தைமொழியாளைக் கண்டான். எவ்வாறு கண்டான்?

பச்சேன்ற திருநிறமுஞ் சேயிதழும்வேண்
ணகையும்பார்வையேன்னு, நச்சம்புமமுதூற
நவிற்றுகின்றமடமோழியுநாணும்பூணுங், கச்
சின்கணடங்காதகன தனமுநுண்ணிடையுங்க
ண்டுசோர்ந்து, பிச்சன்போலாயினனப்பேண்
கோடிமேய்நலமுழுதும் பேறுவானின்றேன்

இராசகுமாரன் சமீபத்தில் வந்ததைச் சேடியர்களாகிய பத்மாவதி காஞ்சனமாலை என்னும் இவரும் கண்டு தமது தலைவிக்கு வேறு போக்குக் காட்டிமற்றுஞ் சேடியர்களை அழைத்துக்கொண்டு வேறு பக்கமாகப்போயினர். இராசகுமாரனும் தூரத்தில் வரும் பொழுதே அவளைக்கண்டு அநேகாகாணப்படும்பெண்மணிதான் இராசகுமாரியாயிருத்தல்வேண்டுமென ஐயுற்று அவளுக்குச்சமீபத்தில்வந்து இன்னதுசெய்வதெனவறியாதுய் யோசித்துக் கொண்டுநின்றனன். அதைக் கமலாம்பிகைகண்டு வேற்றுடவனொருவன் தனக்குச்சமீபத்தில்வந்து நிற்கின்றானேயென நாணங்கொண்டு அந்தரவாசிகளான சுந்தரவதனிகளாம் கந்தர்வநங்கையரின் மிடற்றோசையும் நாணும்படியான இன்னிசைநிரம்பிய மிருதுவாகிய ஓசையுடன்சகிகாள்என்றழைத்தனள். மறுமொழியில்லை. யோசித்துக்கொண்டு நின்ற இராசகுமாரன் இவ்வார்த்தையைக்கேட்டு

வஞ்சியின்மோழியதாகும் வளம்பேறுங்
கிள்ளைதன்னைப், பஞ்சரமாங்கமுத்திற்பதுமனு
ம்படைத்தானன்றே, பஞ்சபாணன்றனே
ண்ணிப்பரிவுடனபகரிக்கக், கோஞ்சிடுமேதரந்
தன்னிற்கோவ்வையாமிதழ்வைத்தானே.

எனக்கூறி அவளைநோக்கி யாழைப்பழித்த மொழியாய் நீயார்செய்தவத்தில் உதித்தாய்? உன் பெயரென்ன சொல்லியருளுக என்றனன். அப்பொழுது கமலாம்பிகையானவள் இராசகுமாரன் சிறுவயதிற் பிரிந்தமையினாலும் தற்காலத்துள்ள ரூபவேறுபாட்டினாலும் தெரிந்துகொள்ளக்கூடாமல் தன்மனதில் நிகழ்ந்த ஐயப்பாட்டினால் அவனைப்பார்த்து இத்துணையன்புடன் வினவுகின்றதாம்யார் முன்னர்ச்சொல்லுக என்றுகூறி நாணத்தோடும் தன்காற்பெருவிரலைப்பார்த்தவண்ணமாக நின்றனள். இராசகுமாரன் அதுகேட்டு நாற்புறமும் பார்த்து பெண்ணேநானிருப்பது நேர்பாளதேசம். என் தந்தையார்பெயர் சகதேவமன்னன். என்பெயர் கருணைகரன். என்னுயிரைக்கொள்ளைகொண்ட ஓர்வனிதா ரெத்தினத்தினிமித்தம் இக்கோலங்கொண்டு இங்குவழிதப்பி வந்துவிட்டேன் அரண்மனைக்குப் போகும்வழியைக் காண்பிப்பீரா? எனலும்கமலாம்பிகை ஆராமையோடும் மழையைக்கண்ட மயில்போலச் சந்தோஷங்கொண்டு அன்னநடையும் பின்னிடக்கொடியிடை நுடங்கச்சென்று அவன்பாதத்தில் வீழ்ந்துவணங்கி என்குறைநீக்கவந்த கோவிளங்குமரா! அபயம்! அபயம்!! தாங்கள் விரும்பிவந்தபெண் அடியாளேயாகும். என்பெயர் கமலாம்பிகை ஞாபகமிருக்கின்றதா? எனவாய்குழறிக்கிடந்தனள். அப்பொழுது கருணாகரனவன் செங்கோல்தாங்கவிருக்கும் அருமைக்கரத்தினால் அவளைத்தூக்கிநிறுத்தி அங்குள்ள ஓர் சந்திரகாந்தக்கல்லின்மீதிருத்தித் தானும்பக்கத்தே இருந்துகொண்டு பெண்ணாரமுதே! நீர் என்னை அவசியம்வந்துகாணும்படி கடிதம்எழுதியதன் காரணம் யாதோ? மாமாஅவர்கள் க்ஷேமந்தானே? அத்தை இறந்ததைக்கேள்வியுற்று அளவற்ற துக்கமடைந்தோம் என்னசெய்யலாம் நம்மிருபகுதியாருக் குமுண்டாகிய கோபம் காரணமாக இதுகாறும் ஒருவரையொருவர் சந்தித்துக் கொண்டாடாமல் இருந்தோம் தற்சமயம் உன்னுடைய தூதுவனையும் கடிதத்தையும் கண்டவுடன் பிதாமாதாமுதலியோருக்குங்கூறாமல் பழைய வயிரத்தையும் பொருட்படுத்தாது விரைந்துவந்தேன் உன்னைக்கண்டேன் என்றுகூறினன். கமலாம்பிகை அதுகேட்டுக் கூறுகின்றாள்.

அத்தான், நான்சொல்வதைக் கவனமாகச் செவிமடுத்தல்வேண்டும், எனது அன்னையாரொழிந்த மற்றும் அனைவரும் க்ஷேமமாகவே இருக்கின்றேம் என்வாயினால் நானும் அத்தானென்று தங்களைக்கூறி வெகுநாளாய்விட்டது, எனதுஅன்னையார் பரகதிசென்றபின் தந்தையார் என்னைப் பக்ஷத்தோடுபாதுகாத்துவந்தனர், சிலநாட்சென்றபின் வேட்டைக்குப்போனவிடத்து ஒரு பெண்ணைக்கண்டு அவளைக் காந்தர்வவிவாகம்செய்து இங்குகொண்டுவந்து அரசியாக்கிவைத்திருக்கின்றார். அவளை எல்லோரும் இராசகுமாரியென்றே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லுகின்றார்கள். அவளுடைய நடையுடை போக்கு முதலியவைகளினால் இராசகுமாரியென்று நான் நம்புவதற்கிடமில்லை. அந்தக்கடைகெட்டகாதகி எனக்குச் செய்யுந் தீங்குகளுக்கோர் அளவில்லை. பாஷாணம்வைத்து என்னைக்கொன்றுபோடப் பலவழியாலும் முயர்ச்சித்தாள். முடியவில்லை. பின் தன்னுடைய நம்பியென்றொருவனைக்கொண்டுவந்து எனது தந்தையாரோடு நட்புண்டாக்கிவிட்டாள். தந்தையாரும் மயக்கமருந்துவிசேடத்தினால் அவள்கட்டளைக்கமைந்து அவனுக்கு அரண்மனையில் ஒருதக்க உத்தியோகம் கொடுத்திருக்கின்றார். அவனுடையபெயர் துஷ்டகேது. சிற்றன்னையாகிய செங்கமலம் என்பாள் என்னை அவனுக்கு விவாகஞ்செய்துகொடுக்கும்படி தந்தையாரிடம் கேட்க அவரும் உடன்பட்டிருக்கின்றதாகக்கேள்வி. அந்தோ! நான் ஜென்மாந்திரங்களில் யாதுபழியைச்செய்தோனோ அரசரேறே! இதுதான் எனக்குவந்துற்ற பேராபத்து. ஆகையால் தாங்கள் என்னை இப்பொழுதே எங்கேயாவது அழைத்துச்செல்லுதல்வேண்டும் இல்லாவிடில் நான் தற்கொலைசெய்துகொள்ளுவேன் பெண்பாவம் உங்களைவிட்டுத்தொலையாது என்று கூறி அழுதனள். இவைகளையெல்லாம் இராசகுமாரன்கேட்டுத் தித்திக்கும் தெள்ளமுதே! தெவிட்டாத செந்தேனே! நீ அனுபவிக்கும் கஷ்டத்தைக்கண்டும் உன்னைவிட்டுப் பிரிவேனோ. உனதுபிதா என்னைக்கண்டால் உடனேபிடித்துச் சிறையிலடைத்துவிடுவார். நீபடுங்கஷ்டத்தைக்கண்டநான் உன்னைவிட்டு எனதுதேசத்துக்குப் போகமுடியாமலும் இங்குவெளிப்படையாக நடமாடித்திரிய முடியாமலும் "இருதலைக்கொள்ளியிலகப்பட்ட எறும்புபோலத் துடிக்கின்றேன்" யாதுசெய்வேன் எனக்கலங்குதலும், கமலாம்பிகைவணங்கி அன்பரே! தாங்கள் இன்னும் சிலதினம் இம்மாறுவேடத்துடன் எனது செவிலித்தாயாகிய அகிலாண்டம்வீட்டில் இருங்கள் அங்கு உங்களுக்கேற்றசகல வசதிகளும் அமைப்பிக்கின்றேன். பின்நாமிருவரும் கலந்துயோசித்து ஏதாவது ஒரு எற்பாடுசெய்வோம்? அதோபாருங்கள் எனதுசேடியர்கள் வருகின்றனர் அடியாள்தங்களிடம் உத்தரவுவாங்கிக் கொள்ளுகிறேன் என்று சொல்லி அவனைவிட்டுப்பிரிந்தாள் இராசகுமாரனும் சத்திரத்திற்குப்போகாமல் அகிலாண்டம் வீட்டிற்சென்று பலவாறுயோசித்துக் கொண்டிருந்தான். (வரும்)

மா. சிவராமலிங்கம்பிள்ளை,
ஆறுமுகநாவலர் வாசிகசாலை,
வண்ணார்பண்ணை.

# திருவாதவூரர் புராணம்.

ஓதநீர்வேலி யுலகின்கண்ணே மாதுரியமார்ந்த வாதவூர்ப்புராணத்தைச்சோதனைசெய்து அச்சிட்டார்பலர். அவரெல்லாருள்ளும் ஸ்ரீமத் அ குமாரசுவாமிப்புலவரவர்களே பலதிருத்தங்கள்காட்டி அச்சிட்டிருக்கின்றார். அத்திருத்தங்களையும், அவைகளுக்கிசைந்த அர்த்தங்களையும் யாம்பலமுறையும் பார்த்தோம். சிலஏட்டுப்பிரதிகளையும் பார்த்தோம். பாரத இராமாயணப்பிரசங்கங்களையன்றி வாதவூரர்ப்புராணப் பிரசங்கமும் பல வித்துவஜனசபைகளிற் செய்திருக்கின்றேம். அச்சபைகளிலெல்லாம் வாதவூரார்புராணம் என்னும்பெயரையே நாட்டியிருக்கின்றோம். சரவணப்பெருமாளையர் முதலிய மெய்ப்புலவர்களும் வாதவூரார்புராணம் என்பதையே அங்கிகரித்திருக்கின்றார்கள். "திருவாதவூரரெனுந் திருநாமம்புனைந்தார்கள்" என்று கடவுண்மாமுனிவருங்கூறினார்.

இங்ஙனமாகவும் பத்திரிகை ஒன்றிலே ஒருவர் திருவாதவூரர் புராணம்என்பதை மறுத்து, "திருவாதவூரடிகள் புராணம்" என்பதை நாட்டப்பார்க்கின்றார். இதுவும்வாய்க்குமா? திருவாதவூரர் என்பதன்றி; திருவாதவூரடிகள் என்பதும் அவருடைய பெற்றாரிடப்பட்ட பிள்ளைத்திருநாமமாகக் கற்றாராற்கொள்ளப்படுமோ? இன்னும்வாதவூரர் புராணப் பிரசங்கத்திலே தடைவிடைகளோடும் நிலைப்படுத்துவோம். "வாதவூரிறைபுராணம்" என்பதும் வருமே!

ஸ்ரீமத் அ. குமாரசுவாமிப் புலவரவர்கள் "திருவாதவூரடிகள்புராணம் என்பது ஈண்டுப்பொருந்தாது" என்றதை யாம் விரித்தும் பிரசங்கிக்க எண்ணி இருக்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறுமுகன் என்பது பிள்ளை என்னும் வருமொழியோடு புணருங்கால் "இலவிகாரமாமுயர்திணை" என்னும் விதிப்படி ஆறுமுகம்பிள்ளை எனவும், ஆறுமுகப்பிள்ளை எனவும், ஆறுமுகபிள்ளை எனவும் வரும். இதனைமறுக்கவல்லவர் யாவர்? மறுப்பாருளராயின்; வெளிப்படுக. இங்ஙனமாக "ஆறுமுகப்பிள்ளை" எனவரல்வேண்டும் என்றார்க்கு விதியாது? சுந்தரம் பிள்ளை கண்டிலரோ? நமக்கு இலக்கணந் தெரியாதா?

ஸ்ரீமத். அ. குமாரசுவாமிப்புலவரவர்கள் "கவளமாகளிற்றின்" என்பதைக் "கவளமாமுகத்தின்" என்று திருத்தினரே! இது மறுக்கப்படுமோ? "மின்பயிலும்மா" என்பதற்கும், "மேவுழர் தாவுழர்" என்பன வற்றிற்கும், "தவர்நால்" என்பதற்கும், அவர்கூறிய உரையை மிகவும் பாராட்டுகின்றேம். "பற்றிலர் பிறிதோரோலை" என்பதற்கும், "சாத்தினர்" "வாரியர்" என்பனவற்றிற்கும், "சாம்புதறவமே" என்பதற்கும் "பாரமிதை" என்பதற்கும் அவர்கூறியஉரை நம்போலிய இலக்கிய இலக்கணவித்துவான்களேயன்றிப் பிறருமறியுந்தரத்ததோ? பொதுமொழி என்பதன் பொருளும் அடிகள் என்பதன் பொருளும் அல்லது என்பதன் பொருளும் இலக்கணப்பிரயோகமும் அறியாதவரோடு யாம் வாதஞ்செய்யப்புகுதல் நீதியன்று.

வித்துவசனசபையில் சாதித்து வலியுறுத்தக் காத்திருக்கின்றேம்.

இங்ஙனம்.

யாழ்ப்பாணம் வட்டுநகர்

மகாவித்துவான்—மு. ஆறுமுகம்பிள்ளை

25/2/68

## பெண்கள்கல்வி.

(௧௱௨-ம்பக்கத் தொடர்ச்சி)

பெண்கள் மறைத்துச் செயற்பாலனவாகிய கருமங்கள்பலவுள. அவற்றுள், நீராடலுமொன்று. அந்தப் புரங்களிலே நாற்புறமுமதில் சூழ்ந்த தனிஇடங்களிலே நீராடல் செய்துவந்தார்கள் என்று நூல்களால் அறியலாகும். நாகரீகம் சிறந்துவருகின்றதென்றெண்ணப்பட்டுவருமிக்காலத்திலே, எவரும் காண நாற்சந்திகளிலும் சதுக்கங்களிலுமுள்ள, ஊருணிகளிலும் மங்கைப்பருவமுடையோரும் நாணாது கூசாது மறைக்கப்படுமவையெல்லாம் வெள்ளிடையே தோன்ற நீராடும்வழக்கம் அடிப்பட்டுவிட்டது. மகளிர்க்கெனவும், மைந்தர்க்கெனவும் வெவ்வேறு விடப்பட்டுள்ளனவா? துறைகள்தாமும் வெவ்வேறாதலின்றி ஓர்துறையிலே இருபாலாரும் நீராடும்வழக்கம் நாகரிகமாகுமோ? கற்புநிலை தவறுதற்கேதுவாகாதோ. ஓர்இடத்தே பன்னாள்பன்முறை கண்டு வார்த்தையாடும் பயிற்சிமிகுதியும் சிற்சில அவயவக்காட்சி நிகழ்வும் யாதாய்முடியும். வான்பெரும்புடைவைகொண்டு மருங்குறச் சூழ்ந்துசூழ்ந்து உடுத்தநுகில் முழுதுமொழிந்து ஒருசிறிதே இடையிலிருப்ப மூழ்கி எழுங்கால்நீரில் நனைந்தநுகில் அவயவங்களோடு சேர்ந்தும் சிற்சில இடங்களிற் போயொடுங்கியும் நிற்கும் நிலையிலவர் நிற்பது ஆடவர்மனங்களிலன்றி வேறெங்கேயோ. நீர்க்கரையில் நிற்பவரெல்லாம் ஐம்பொறியடக்கிய அறிஞரோ? காமுகர்விடர் தூர்த்தர் நிற்பின் கையிகந்த தீச்செயல்கள் வாயப்புழி நிகழ்த்திடாரோ. நீராடிமாசுகழியின் வேறோர் புத்தழகுபிறக்குமென்பது

காகதுண்ட நறுங்கல வைக்களி
ஆகமுண்ட தடங்கலும் நீங்கலால்
பாகடர்ந்த பனிக்கனி வாய்ச்சியர்
வேகடஞ்செய் மணியென மின்னினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதனாலறிக.

நீராடி எழுங்கால் தோன்றுமவயவக் காட்சியில் ஆடவர் மனநிலைகலங்கி மயங்குவர் என்பது.

எரிந்த சிந்தைய ரெத்தனை யென்கனோ
அரிந்த கூருகிராலழி சாந்துபோய்த்
தெரிந்த கொங்கைகள்செவ்விய நூல்புடை
வரிந்த வங்கலசங்களை மானவே.

கரிசனமன்னகொங்கை காண்டலும் தளர்ந்தோர்காளை, தரிசனந் தன்னிலே தென் சிந்தையைப் பிணித்ததென்றாற், பரிசனந்தன்னி லென்னாமோவென் றயிர்பைத்து நின்றான்,

எனவருவனவற்றால் உணர்க.

இனித்தம்முட்சேர்ந்து செல்குவம் என்பராயின் மனநிலை பெயர்தற் கேதுவாவனவற்றால் கற்புநிலைவழுவுங்கால் இவரெல்லாம் எத்துணைசெய்வர்

மழைவளம் தரும்பெண்டிராயின், ஆடவர்மனம் புகுதாமையன்றே மரபாகும்.

(வரும்.) இங்ஙனம்,

அன்னபூர்ணேஸ்வரி

---

நூலாசிரியர்கள்

## கருத்தொற்றுமை.

(திருமுருகாற்றுப்படை.)

வரிப்புனை பந்தொடு பாவை தூங்கப்
பொருநர்த் தேய்த்த போரரு வாயில்

இ—ள். பகைவரை மகளிராக்கி, அவர் கொண்டுவிளையாடுதற்குத் தூக்கின நூலால் வரிந்து புனையப்பட்ட பந்தும் பாவையும் அறுப்பாரின்மையிற் றூங்கியேவிடும்படி பகைவரில்லாமையால் போர் அரிதாய்ப்போன வாயில். எ—று.

போர்வீரராயினுர் தம்பகைவர்களை ஆடவர் என்று தாழுமெண்ணார் என்பதாம்.

தமிழ்நாட்டரசர்களின் புயவலி "பந்தொடு பாவைதூங்க" என்பதனாற் குறிப்பிக்கப்பட்டது. மேனாட்டில் பெருங்கவிச்சக்கரவர்த்தியும் நாடகக் கவியுமாகிய 'ஷேக்ஸ்பியரும்'நக்கீரரும் ஒத்தகருத்தினராயிருந்தனர் என்பதைக்காட்டுகின்றாம்.

பிரான்சு தேசவுரிமை பாராட்டிய ஆங்கிலவரசனுக்குப் பிரான்சு தேசாதிபதி இகழ்ச்சிக்குறிப்புத்தோன்றிட விளையாடுவதற்குப் பந்துகளை அனுப்ப மாசற்ற வீரரில் வீரனாகிய ஆங்கிலராசன், அவ்விகழ்ச்சியினைச் சகிக்கலாற்றாதவனாய் இப்பந்துகளை நான் இரும்புக் குண்டுகளென எண்ணி அவ்விரும்புக்குண்டுகளைக் கொண்டு செய்யும் விளையாடலாகிய போர்புரிவதற்கு வேணவாவுடையனாய் இருக்கின்றேன் என்று நமது அரசர்பாற் சென்று சொல்லுமின் என்று ஹென்றி பிரான்சுதேசத்திலிருந்து பந்துகள் கொண்டுவந்த தூதர்பாற் கூறிவிடுத்ததாய் "ஷேக்ஸ்பியர்" கூறியதை மேற்காட்டிய "பந்தொடுபாவை" என்னும் நக்கீரர் கருத்துடன் ஒப்பிட்டுப்பார்க்கின் களிப்பும் வியப்பும் தோன்றாநிற்கும். என்னை! வேறுபாடற்ற ஒரேமனோபாவம், தேயங்கடோறும் இருந்த பலபுலவர்மாட்டும் காண்டலின் மகிழ்ச்சிதருவது பிறிதொன்றில்லையாகலின் என்க. இதனுடன் ஒப்பிடுக

*Shakespere*
*King Henry V.*
*Act -1- Sc. 2*

*"When we have matched*
*our rackets to these balls*
*We will in Frnce, by god's*
*grace play a set*
*Shall strike his father's Crown*
*into the hazard*

..............................

*This Mock of his*
*Hath turned his balls to*
*gun stones*

பந்தொடு பாவைதூங்க விடுவதினால் வரும் இகழ்ச்சியைப்பொருது போர்க்கு வருவோர் சுத்தவீரர்களேயாம் ஆகலின் எதிர்ப்பார் ஒருவரின்றித்தூக்கப்பட்டிருத்தலைக்கண்டிருப்பவர்கள் உளராவராயின் அவ்வாறு தூங்கவிட்டிருப்பவர்களின்வலி மற்றையோர் வலியினும் முதன்மைபடைத்துளது என்பதை அறிவிப்பஇன்னணஞ் செய்தல் முன்னையோர்வழக்க மென்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முருகக்கடவுளும் முந்நீரிலங்கையும்.

கற்கத்தா முதலிய வடநாட்டிலே வழிபடுகடவுள் துர்க்கையாயினாற்போல, இலங்கையில் வழிபடுகடவுள் முருகக்கடவுளேயாம். இலங்கையிலே சைவர்களேயன்றி, பௌத்தமதச் சார்பினராகிய சிங்களவர்களும், முருகக்கடவுளை வழிபடும் ஒழுக்கமுடையோர். தமிழ்வழக்கற்ற சிங்களநாட்டினுட்பாகங்களிலுள்ள குக்கிராமங்களிலும் சுப்பிரமணியவாலயங்களுள்ளன. அவ்வாலயங்களிலே, சிங்களவர்கள் மிக்க பயத்துடனும், பக்தியோடும் ஈர உடையுடன் நின்று ஈர வஸ்திரத்தினாலே வாயினைக் கட்டிக்கொண்டு சுப்பிரமணிய சகத்திர நாமங்களைப் பயப்பயத் தனித்தனி மானசிகமாகச் செபித்து ஆய்ந்தெடுத்த வில்வங்களால் அருச்சனை செய்வார்கள். அருச்சனை முடியப் பத்து நாழிகைகள் வேண்டப்படுகின்றன. இந்திரசித்து, நிகும்பலையாகஞ் செய்தமையின் அப்பெயரி (NEGOMBO) னால் ஆங்கிலேய பாஷையிலே இன்றும் வழங்கும் நீர்கொழும்பினின்றும் இரண்டுமைல் தூரத்தே ஓர் கிராமத்துள்ள சுப்பிரமணிய ஆலயத்தில் அவ்வூர்ச் சிங்களப்பிரபுவாகிய அவ்வாலய அதிபதி மேற்கூறியவாறு பூசனைசெய்த முறைமையினை நம்மவருட் பலரறிவர். இலங்கையிலே காரணம்பற்றி வழங்கிய சில நாடுகளின் பெயர்களை, அக்காரணமறியாது பிற்காலத்திலே தமிழிலே சில விகாரப்படுத்தி வழங்குவாராயினர். வழங்கினும் ஆங்கிலேயத்திலே இன்றும் அவ்வாறே வழங்குகின்றன.

இந்தியாவிலே பெரும்பாலும் வீடுகடோறும் பாகவதராமாயணப் பிரசங்கங்களும், ஏகாதசி விரதமுந் தவறாது அநுட்டானத்திலடிப்பட்டு வருகின்றன. இலங்கையிலேயோ சுப்பிரமணிய வரப்பிரசாதியாகிய ஸ்ரீ. கச்சியப்பசிவாசாரியசுவாமிகள் திருவாய்மலர்ந்தருளிய கந்தபுராணம் வருடந்தோறும் படிக்கப்பெறாத ஆலயங்களில்லை. அநேகர் சுப்பிரமணியப்பெருமானடியவர்களுள் விசிட்டம்பெற்ற நக்கீரதேவரருளிய "திருமுருகாற்றுப்படையைப்" பாராயணஞ் செய்யும் நியமமுடையோர். சுக்கிரவாரம், கார்த்திகை முதலிய சுப்பிரமணிய விரதாநுட்டான முடையோரே பலர். நம்மவர் பாராயணஞ் செய்துவரும் அந்தத் "திருமுருகாற்றுப்படை" யின் சிறப்பினைச் சுருக்கிக் கூறுகின்றாம். இலங்கையின் கீழ்பாலுள்ள கதிர்காம க்ஷேத்திரத்தினைச் சார்ந்துள்ள நாடுகளிலே இன்றும் வழக்கிற் காணப்படும் பூசனைகளும் வழிபடுமுறைகளும் பெரும்பான்மையும் திருமுருகாற்றுப்படையிலே கூறிய முறைகளையே ஒத்திருக்கின்றன. அஃதாமாறு பின்னர்க் கூறுதும்.

இறையனாரகப்பொருளும் திருவள்ளுவர் திருக்குறளும் அவ்வெனத் தொடங்கி, னவ்வென முடிந்து இறைவனும் அவனருள் வழிப்பட்டோரும் அருளிய தமிழ்நூல் என்பதுணர்த்தி நின்றதன்மேலும், முன்னைப்பொருளால், "அன்பின்" எனத் தொடங்கி "மேன" என முடிந்து, நூலிற் சொல்லப்படுவனவெல்லாம் "அன்பின்மேல" எனப்படும் வாய்மையினை வெளிப்படுத்தியவாறு போல, திருமுருகாற்றுப்படையும் "உலகம் உவப்ப" எனத் தொடங்கி, "கிழவோனே" என முடிதலால், நமதூனக்கண்ணிற் காணப்படும் இவ்வுலகிற்குரியவன், அதனாற் காணப்படாத இந்நூலானுவலப்படும் முருகக்கடவுளே என்பதும் அவர் தொழில் ஆன்மாக்கள் பேராநந்தமுறச் செய்தலேயாமென்பதும் விளங்க வைத்தவாறு உய்த்துணருந்தோறும் அன்புமானந்தமும் நிறைகின்றது.

இதனால், வீடுபேற்றில் விருப்புடையான், உலகுகிழவோனையே சென்றடைய வேண்டுதலின், அதன்பொருட்டாற்றுப்படுத்தற்குரிய முழுமுதல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வராவார் முருகக்கடவுளே என்பது முதலிலே முடிந்த பொருளாயிற்று.

ஒருபொருளினியல்பை எடுத்து விளக்கப்புகுவார், முதல் அப்பொருள் எப்பெயர்த்து, எவ்வடிவிற்று, எத்தொழிலது எனக் கூறவேண்டுதல் முறைமையாதலினால், இந்நூலுடையாரும் "உலகுகிழவோன்" என்பதனாற் பெயரும், "ஞாயிறு கடற்கண்டாங்கு" என்றதனால் வடிவும் தொழிலும் முன் பொதுவகையாற் கூறியவாறு கண்டுகொள்க.

"ஞாயிறுகடற்கண்டாங்கு" என்றதனால் வடிவுந் தொழிலும் பெறப்படுமாறென்னையெனிற் கூறுதும்.

கடலின் கருமையும், ஞாயிற்றின் செம்மையும்போல, மயிலின் பசுமையும், இறைவர் திருமேனியின் செம்மையும் விளங்கும். எனவே, அவர் வடிவு பொதுவகையாற் பெறப்பட்டது.

இன்னும் ஞாயிறு கடலிற்றோன்றி, இருளைக் கெடுக்குமாறுபோல, இறைவரும் மயிலிற்றோன்றி, ஆன்மாக்களது மலவிருளைக் கெடுத்தருளுவர் என்பதும் தோன்றினமையின், அவர் தொழிலும் ஈண்டே பொதுவகையாற் பெறப்பட்டது.

பெயர் முதன்மூன்றனையும் வடநூலார் முறையே நாமரூபக் கிரியை என்பர். இன்னுமவர் திருவுருவம் ஓசைவடிவினையுடைய மந்திர சொரூபமென்பது "உலகுகிழவோன்" என்றேயெழுத்தின்முடித்துக் காட்டியவாற்றால் அறியக்கிடந்தது. ஸ்ரீ பஞ்சாக்ஷரமகிமைகூறும் சோடசகலாப்பிரசாதசம்பந்தம் பதினெழுத்தாலாகிய முதலடியாலமைக்கப்பட்டது. "பலர்புகழ் ஞாயிறு" என்பதற்கு எல்லாச்சமயத்தாரும் புகழும் ஞாயிற்றினை என நச்சினார்க்கினியர் கூறுமாற்றானே முருகக்கடவுளும் எல்லாச்சமயத்தாராலும் புகழப்படுபவர் என்பதும் துணியப்பட்டது. அஃது இலங்கையிலே நம்மவரேயன்றி, பௌத்தசமயிகளும், முருகக்கடவுளைப் போற்றுமாறு மேலே கூறினேம். நாகூர் சுப்பிரமணியதலமாமாறும், அதன்வரலாறும் பின்னர்க் கூறுதும். (வரும்.)

மா. சிவராமலிங்கம்பிள்ளை,

ஆறுமுகநாவலர் வாசிகசாலை,

வண்ணார்பண்ணை.

## கடன்கோடல்.

"கடன்கொண்டார் நெஞ்சம்போலக்
கலங்கினனிலங்கைவேந்தன்".

என்பது இராமாயணம்.

கடன்கொண்டார்மனம் கலங்குமாற்றினை வடமொழியிலொருபுலவர் கூறிய தனேடியையக் கூறுகின்றேம். கடன்வரநாணந்தோன்றும்; அதுதோன்ற முகத்தினொளிகுன்றும்; அதுகுன்றப் போமிடங்களில் அவமானமுண்டாம்; அஃதுண்டாகத் துன்பம்வந்துறும்; அஃதுறப் புத்திகலங்கி விவேகவிளக்கம் இல்லையாகும்; ஆகவே இறுதியில் அழிவுவந்துறும் என்பதாம். இராவணன்பாற் படிமுறையே இவைகள் நிகழ்ந்து இறுதியில் அழிவுவந்துற்றவாற்றினை உன்னியே ஆசிரியர் கம்பரும் "கடன்கொண்டார் நெஞ்சம்போல" என்றுவமித்த இவ்வுவமையின் சிறப்பும் நுண்மையும் உணர்ந்துகொள்க.

## சில குறிப்புக்கள்.

### கற்கண்டு செய்யும் முறை.

அயல்நாடுகளிலிருந்தே, நமது நாட்டிற்குக் கற்கண்டுவருகின்றது. சர்க்கரையினாலே கற்கண்டுசெய்து கொள்ளலாம். 33 சேர்சக்கரையை 17 சேர் ஜலத்திலிட்டுநன்றாய்க்காய்ச்சி சர்க்கரை கரைந்துபோம்பொழுது அதன்பாலுள்ள குச்சிகளையும் தடிகளையும் துரும்புகளையும் எடுத்தெறிந்து கொதிவருமுன் அரைப்படிபாலைவிடவேண்டும் பின் சர்க்கரையினின்றும் மிதந்துவரும் அழுக்கினைநீக்கிப் பாகுபதம் வந்தவுடன் இறக்கிவைக்கவேண்டும். முன்னே இதற்கென்று வைக்கப்பட்டிருந்த மண்கலயங்களை மூன்றுநாள் தண்ணீரிலே ஊறப்போட்டு அவைகளை நிரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாய்வைத்து மூங்கிற்றடிகளை அவைகளின் வாயிலே குறுக்கே கட்டவேண்டும். அந்தமூங்கிற்றடிகளிலே நூல்துண்டுகளைக்கட்டி அடியிலே பசையினாலே நூலைஒட்டி வைக்க வேண்டும். அவைகளிலே அப்பாகினைவிட்டு ஏழுநாள்வரையும் வைத்திருக்கவேண்டும். பின்சிலதினம்வரையும் அவைகளை வெய்யிலிலே வைத்துவரவேண்டும். பின் உடைத்தால் கற்கண்டு விளைந்திருக்கும்.

## இலவமரம்.

இதன்பஞ்சு தலையணை மெத்தைகளுக்கு உபயோகிக்கப்படுகின்றது அதினால் இதன்விலை அதிகம். இலவம்பஞ்சு ஜாவாத்தீவிலேதான் அதிகம். இதன்பஞ்சு தெப்பங்களுக்குபயோகிக்கப்படுகின்றது. இம்மரப்பட்டைப்பிசின் மருந்திற்குபயோகம். இதன்கொட்டையிலே எண்ணெய் இறக்கப்படுகின்றது. தோல் பதனிட மரம் உபயோகம். இதனெண்ணெய் சவுக்காரத்திற்சேர்க்கப்படுகின்றது. பிண்ணாக்கு மாடுகளுக்குணவாகின்றது மரம் பதுமைகள் செய்யக்கூடும். ஆதலால் இதுவளர்க்க அதிகம் பிரயாசமில்லை. வெளியிடங்களில் உண்டாக்கினால் எம்மூரவர்கட்கே பஞ்சின்பொருட்டாயினு முதவாதா?

## வாழை.

300. அடிகள் இருந்தால் ஒருகுடும்பம் சாதாரணமாய்ச் சீவனஞ்செய்யலாம் வாழைக்கன்றுகளை ஒன்றரைமுழ ஆழத்தில் நடவேண்டும். ஒன்றற்கொன்று 7 முழந்தூரமிருக்கவேண்டும். 1600 சதுரமுழத்தில் 1200 அடிகள் நடலாம். மணற்பாங்கானநிலங்களிலே சேற்றை எருவாகப்பாவித்தால்பலனதிகமாகின்றது. சேறும் காட்டுமண்ணும் கலந்து உபயோகிக்கின்றார்கள் பிண்ணாக்கும் எருவாகின்றது. இப்பயிர்வளர்ச்சிக்கு வேண்டுவது இலைகொய்யாதிருத்தலேயாம். ஆறுமாதங்களுக்கொருமுறை உழவேண்டும். மாட்டெரு இடின் ஒருவிதப்புழு தோன்றி ஈரக்கசிவினால் வளர்ந்துகிழங்குகளைத்தின்று பயிரை அழித்துவிடுகின்றது. இதனது நாரினால் வஸ்திரஞ்செய்யப்படுசின்றது. நாரினுட்பாகத்தைச்சுட்டு எரித்துச் சாம்பராக்கி அதனால் வஸ்திரங்களைச் சுத்தம் செய்யும் ஓர்வித உப்புச்செய்யப்படுகின்றது. பட்டைசிறுதுண்டுகளாக்கி மாடுகளுக்கு உணவாகவிடப்படுகின்றன.

## தேங்காய்ஓடு.

இதனது ஓட்டினாலே பொத்தான்கள்செய்யப்படுகின்றன. இளமோடு வெண்ணிறமாயும் முதிர்ந்தவோடாயின் கறுத்துமிருக்கின்றது. இது தஞ்சாவூர் ஜில்லாவிலே பின்னத்தூரிலே நடக்கின்றது. இதனைச்செய்பவர் பிரமஸ்ரீ. பி. ஏ. சுப்பிரமணியஐயரவர்கள். எம்மூரவர்களிவைபோல்வனவற்றைக் கவனியாத தென்னகாரணமோ ஓடு, சிறட்டைஎனவும் கொட்டாங்கச்சிஎனவும் வழங்கப்படும் இதுஎரிக்கப்பட்டுக் கொல்லுலைக்கரியாகப் பாவிக்கப்படுகின்றது. விறகாக வீணிலேஎரிக்கவும் படுகின்றது.

## ஸ்ரீமான். வில்லியம் ஆஸ்டன்.

இவர் அமெரிக்காவிலே பிறந்தவர். இவர் பற்பல பத்திரிகைகளை வெளியிடும் அதிபதி. அமெரிக்காவிலே பிரதான நகரங்களினின்றும் பத்திரிகைகள் இவரால் வெளிவருகின்றன. இவர்கீழ் அநேககாரியஸ்தர்உளர். முதலாம் காரியஸ்தனுக்கு வருஷம் ஒன்றுக்கு ஒன்றரையிலக்ஷம்ரூபா வேதனம். இரண்டாம் காரியஸ்தருக்கு, 12,0000 ரூபா வேதனம். மூன்றாம்காரியஸ்தருக்கு 90000 ரூபாவேதனம். வேறு மூவருக்கு 70000 ரூபா வீதம் வேதனம் கொடுபடுகின்றது 10 லக்ஷம் ஏக்கர் இவருக்குண்டாம். இவர்ஒருபெரிய கோடீசுவரர். ஊக்கமே ஒருருக்கொண்டவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் இருபாலை

வித்துவசிரோமணி

சேனாதிராயமுதலியாரவர்கள் இயற்றிய

# நல்லைவெண்பா.

(௧௫௬-ம்பக்கத்தொடர்ச்சி.)

தாரா பதந்தழுவுந் தண்பூகத் தாறருணன்
றேர்மேற் புனைமணியாஞ் சீர்நல்லூர்—சீர்மேவுந்
தூக்குக் குடத்தான் சுதனுந் தொழுந்தோகைக்
கூக்குக் குடத்தான் குலம்.

தாராபதம்-நக்ஷத்திரமண்டலம், பூகத்தாறு-கமுகங்குலை, அருணன்-சூரியன், தாறுகள் செம்மையன பசியனவாகலி னவ்வினமணிகளை போன்றன. உயர்வின் மிகுதி கூறுவார் போன்று நிலவளம் கூறியவாறு. தூக்கு. குடத்தான்-குடக்கூத்தினையுடைய திருமால், தூக்கு-கூத்து. சுதன்-அவர் மைந்தராகிய பிரமா. தோகை-இறகு. கூ-கூவுகின்ற. குக்குடம்-சேவற்கொடி. ௩௯

ஓங்கு வளைக்குழையா ரொண்கண்ணுஞ் செங்கரமுந்
தேங்குவளை காட்டுந் திருநல்லூர்—பூங்குறிஞ்சிக்
கார்த்திகையா ரும்பல் கனங்கிரியான் காயமுலாங்
கார்த்திகையா ரும்பல் களம்.

ஓங்கு-வள்ளை குழையார்-படருகின்ற வள்ளைக் கொடிபோன்ற காதினையுடைய மகளிர்கள். கண் தேம் குவளை காட்டும்-(அவர்) கண்கள் தேன் செறிந்த குவளை மலரை நிகர்த்து விளங்கும். கரம் தேங்கு வளை காட்டும்-(அவர்) கைகள் நிறைந்த வளையல்களைக் கொண்டு விளங்கும். குறிஞ்சி கார்த்திகை ஆரும் பல் கனம் கிரியான்-குறிஞ்சிநிலத்திலே கார்த்திகைக்கொடி ஆர்ந்த பலமேகங்கள் படிகின்ற மலைகளையுடையவர். காயம்-ஆகாயம். கார்த்திகையார் உம்பல்-கார்த்திகைப் பெண்களது குமாரர். ௪௰

ஆசினிவே ணிப்பொலிவா லாரமணி கன்னிகையார்
தேசதனுற் காசிநிகர் தென்னல்லை—வாசவன்மு
னண்டரண்ட ராயநிலை யட்டருளி னனகில
வண்டரண்ட ராய னகம்.

ஆசினிவேணி-ஆகாயகங்கை. ஆர மணிகன்னிகை ஆர் தேசு-முத்துக்களையுடைய மணிகர்ணிகை பொருந்தியிருக்கின்ற மகத்துவம் எனச் காசிக்கியையக் கொள்க. ஆசினி-பலாமரம். வேணி- ஆகாயம். ஆரம் அணி கன்னிகையார் எனப் பிரிக்க. தேசு-அழகு. என நல்லூருக்கியையக்கொள்க. அது பகுதிப்பொருள்விகுதி.

வாசவன்முன்-இந்திரனையுள்ளிட்ட. அண்டர்-தேவர்களது. அண்டர்-பகைவர்களாகிய அசுரர்கள். ஆய-மல்கிவாழ்வுற்றிருந்த. நிலை-நிலைமை. வீரமகேந்திரமுமாம். அண்டராய நிலை அட்டு அருளினன்-பகைவனும் நிலைமை போக்கித் திருவருள் செய்தவர் என வேறு மொருபொருடோன்றிற்று. அகில அண்டரண்டராயன்-எல்லா வண்டங்கட்கும் இறைவர். ராயன்-தலைவன். வரும். ௪௧

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலயாத்திரைப் பொதுவிதி.

(கசுரு-ம்பக்கத் தொடர்ச்சி)

**விதிஸ்நானமாவது:**—முன் கரையில்வைத்த மூன்றுங்கூறுகிய மிருத்திகை மிகுதியை சம்மிதையால் அபிமந்திரித்து எடுத்துக்கொண்டு நாபியளவு சலத்தினின்று அம்மிருத்திகையை இடக்கையில்வைத்து கிழக்கு, தெற்கு வடக்காக மூன்றுபங்காய்ப்பகுத்து அம்மூன்றினும்முறையே அஸ்திரம், பஞ்சப்பிரமம், மூலமந்திரம் இவைகளால் ஓர்கால் அபிமந்திரித்து அத்திரத்தால் ஜெபிக்கப்பட்ட மிருத்திகையை இரண்டுகூறுக்கி ஓர்பங்கைச்சலத்திற் கரைத்து சிவதீர்த்தமாகப்பாவித்து கங்காஸ்மரணஞ்செய்து மற்றோர்பங்கைச்சிவதீர்த்த சலத்தோடு தன்னைச்சூழவளைத்து பஞ்சப்பிரமங்களால் செபிக்கப்பட்ட மிருத்திகையை சரீரமுழுவதும்பூசி சிவபெருமானைத்தியானித்து சண்முகமுத்திரையால் சண் காது இவைகளைமூடிக்கொண்டு ஸ்நானஞ்செய்து பின் சந்திரசூரியமண்டலத்தின் மத்தியிலிருக்கின்ற சத்தியையும் சிவத்தையும் இடதுகை வலதுகைகளில் முறையேபாவித்து கும்பமுத்திரைபிடித்து சம்மிதையால் அபிஷிஞ்சனஞ்செய்தல்.

மலஸ்நானமும் விதிஸ்நானமுமாகிய வாருணஸ்நானஞ் செய்ததன்மேல் விக்கினசாந்தியின்பொருட்டுத் திக்குகளிலும் விதிக்குக்களிலும் இருகையாலும் அத்திரமந்திரத்தால் சலத்தையிறைத்துக் கரையிலேறி கங்காசமாபனமும் கோதானமும்செய்து உலர்ந்தவஸ்திரந்தரித்துக் கைகால்சுத்திசெய்து ஆசமனஞ்செய்து பஸ்மஸ்நானமும் மானஸ்நானமும் அதன்மேல் அனுட்டானமுஞ்செய்யவேண்டும். கங்காதரிசனம் சமாபானம்கோதானம் இவைமேல் ஸ்நானவிதியுடன்கூறப்பட்டன.

பஸ்மஸ்நானத்தில் அபிமந்திரித்த பஸ்மத்தை திவ்வியமுத்திரையாலெடுத்து அஸ்திரமந்திரத்தால்சிரசுமுதல் பரிசிப்பது மலஸ்நானமாக வாருணஸ்நானத்தைமலஸ்நானமென்றதென்னையெனின் வைதிகத்து மார்ச்சனம் அகமருடணம் முதலியன சந்தியாவந்தனத்துக்கும் ஸ்நானத்துக்கும் அங்கமாதல்போல மலஸ்நானமும் பஸ்மஸ்நானத்திற்கும் வாருணஸ்நானத்திற்கும் முதலில் அங்கமாயினவென்க. (வரும்.)

சிவ. இ. மாரிமுத்து உபாத்தியாயர்
வண்ணார்பண்ணை.

# புத்தகவரவு.

## சிவத்தோத்திரக்கவித்திரட்டு.

இது யாழ்ப்பாணம் சைவப்பிரகாசவித்தியாசாலைத் தலைமையுபாத்தியாயரும் தமிழ்ச்சங்கப் புலவருமாகிய ஸ்ரீமத். அ. குமாரசுவாமிப்புலவர் அவர்களால் தொகுக்கப்பட்டதொரு தொகைநூல். இதில் விநாயகக்கடவுள், முருகக்கடவுள், சிவசத்தி என்னும் இக்கடவுளர்க்குத் தோத்திரப்பாக்கள் தேவாரத்திருமுறையினின்றும் எடுக்கப்பட்டிருக்கின்றன அன்றியும் சிவபரத்துவவிசேடம் சிவனைவழிபடல் அதனால்வரும்பயன் விபூதி உருத்திராக்கம் ஸ்ரீபஞ்சாக்கரம் சிவாலயசேவை சிவத்தியானம் உடம்புநிலையாமைஅந்தியகாலம் சிவநாமம் மனவழிபாடு எனவரும் இவைகளின் இயன்முறைகளை விளக்கும் (அரு) திருவருட்பாக்கள் அத்திருமுறையினின்றும் தெரிந்து கோவைசெய்யப்பட்டிருக்கின்றன. இன்னும்திருவாசகம் திருவிசைப்பா திருப்பல்லாண்டுமுறைகளி பெரியபுராணம் திருப்புகழ் என்னும் இத்திருமுனின்றும் தோத்திரப்பாக்கள் தொகுக்கப்பட்டிருக்கின்றன. ஆதலால் நாடோறும் பாராயணம் செய்வார்க்கு வாய்ப்புடையது. கலாசாலைகளிலே சமயபாடங்களுள் ஒன்றாக அமைக்கப்படுதல் தகுதியுடையதாகும்.

## மோகனசுந்தரம்.

இது பிரபஞ்சாந்தகாரத்திலே மறைந்து விகாரமுற்று மாறிமாறித்தோன்றும் இயல்பினவாகிய விஷயங்களை நுட்பமதியின் வேகத்தாலாய்ந்து நடுநின்று சீர்தூக்கித் தெளிந்துகொள்ளும் வகையினை நன்றுறப் பயிற்றும் ஒருகற்பனசரித்திரம். இதில், இசையினால் காமப்பயிர் விளையுமாறுந் தையலார் வலையிற்சிக்கி அவர்வழிநிற்கும் ஆடவர்க்குச் சாந்துயரும் அல்லலும் பழியுமாகுமாறுஞ் சிற்றன்னையர் தம் வஞ்சகமும் வன்கண்மையும் தோன்றாது நடிக்குமாறும் வெளியுற சுந்தரமுதலியார் மேலும் லீலாவதி மேலும் வைத்து உலகியல்விளங்கக் காட்டிய பேரறிவாண்மையைப் புலவர்கள் பாராட்டாதொழியார்.

மேலும் முற்கூறியவண்ணம் உத்தேசவகையினாலும் அநுமானத்தாலும் சோதனைவகைமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாலும் சார்பினாலும் விஷயங்களை விரையாதா நின்று தெளிந்துகொண்டதை மறத்தலின்றிக் காலமுமிடனும் வாய்ப்பவுபயோகிப்பதே அறிவிற்கழகாவது என்பதனைக் கோவிந்தன்மேல் வைத்துக்கூறிய விஷேதொன்றே அமிருர்ந்த நூலாசிரியாது கூர்த்த நுண்ணறிவினது பெருக்கின் ஆழத்தை அளப்ப அமைந்ததோர் கருவியாயிற்று. மோகனமுதலியாரையே கொலைப்பாதகனென இறுதியில் நிறுவியதும் இரக்கொழிந்தாரெனவே வாசிப்போர் துணிந்துவிட்ட சுந்தரமுதலியார் உயிரொழிந்திலராய் இருந்தனர் எனமுடித்துக்காட்டியவைசித்திரியமும் இரசக்கிராகிகளுக்குங்கழி பேருவகை பொழியாநிற்கும்.

இன்னுங் காட்டாதொழிந்த அறங்களும் நீதிகளும் ஆங்காங்கமைய எடுத்துக்கொண்டவிஷயங்களுக்கேற்பச் செந்தமிழ்மொழிகளால் இன்சுவை ஊற்றெடுப்பத் தண்ணென்றொழுகும்பாஷாகதியும் காதைகளின்போக்கும் முடிவும்மிக வியக்கத்தக்கது.

இதுபோன்ற கற்பனாசரித்திரங்களாற்றான் தமிழினை அருவருத்துவெறுக்காது வாசிக்கும்வழக்கம் உலகிலே ஒருசிறிது நிலைபெற்றிருக்கின்றது. இவ்விழுமிய நூலினை இயற்றியுபகரித்தவர் சென்னை "கிருஷிகன்" பத்திராதிபரும் "இராசாம்பாள்" "சந்திரகாந்தா" என்னும் கற்பனைக்காதைகளினுக்கியோனுமாகிய ஸ்ரீமான் *J. R.* ரங்கராஜு அவர்கள் இவர்செய்த இந்நன்றிக்கு நாம்செய்யும் கைமாறாவது இவைபோன்றநூல்களை இன்னுமிவர்கள் எழுதி நல்குமாறு தமிழுலகினெப்பாலாரும் ஒவ்வொருபிரதிவாங்கி வாசித்து ஊக்கப்படுத்தி விடுதலேயாமென்பது எமதுதுணிபு இதன்விலை—அணு 12.

எஞ்சியவை மறுமுறை.

# பத்திரிகைவரவு.

## லோகோபகாரி.

இது சென்னையினின்றும் சோமவாரந்தோறும் வெளிவரும்தமிழ்ப்பத்திரிகை. இதில் முதற்பக்கத்திலே வியாசசூத்திரங்கள்போல அரிய வேதாந்த விஷயங்கள் சொற்சுருங்க அரும்பொருளடக்கி குறிப்பிடப்படுகின்றன. இன்னும் உலகினர்க்கு வேண்டப்படும் இன்றியமையாச் சிறப்புடைய விஷயங்கள் பொதுநன்மையின்வளர்ச்சிக்கேற்ப ஆய்ந்து எழுதப்படுகின்றன. முற்கால தத்துவஞானிகளின் கருத்துக்களும் உபநிடதமொழிபெயர்ப்புக்களும் விவசாயவிளக்கங்களும் சுதேசபிறதேச வர்த்தமானங்களும் எவர்க்கும் விளக்கமுற்றினிமையூறச் செவ்வியநடையிலே எழுதப்பட்டுவருகின்றன. தமிழ்ப்பத்திரிகைகளுள் சிறந்தவை இவை எனக்கோவைசெய்யுங்கால் இதுவுமொன்றாகுமென்பது எமதுதுணிபு. இதன் அதிபர் ஸ்ரீமத். கோ. வடிவேலுச்செட்டியாரவர்கள்.

## அமிர்தவசனி.

இது திருவனந்தபுரத்தினின்றும் வெளிவரும் மாதாந்தப்பத்திரிகை இக்காலத்திற்கேற்பதொரு சீரிய செந்தமிழ் நடையினது முற்காலத்தெம்மனோர் வரலாறுகளும் ஜப்பான்முதலிய தேயங்களின் வழக்கங்களும் சிலபெரியோர்களது சரித்திரங்களும் பிறவும் இதில் எழுதப்பட்டுவருகின்றன. எவருக்குமொப்பவேண்டும் பொதுவிஷயங்கள் ஓர்சார்பின்றி எழுதப்படுதலின் இதனை எவரும் ஆதரித்தல்முறைமையாகும். ஸ்ரீமான். பண்டிதர் மு. முத்துஸ்வாமிபிள்ளை அவர்களே இதன்பத்திராதிபர்

## கிருஷிகன்.

இது, விவசாய விஷயங்களினியல்புகளையும் குணகுணங்களையும் விரித்துக்கூறி மாதாந்தம்சென்னையினின்றும்வெளிவரும் ஒரு சிறு உழவுநூல். இதில் ஆடுமாடுகளினருமையும் அவைகளைப் போஷிக்கும் முறைகளும், எருவினங்களும் அவற்றினுபயோக பேதங்களும், பயிரினங்களும் அவைகளுக்குறும் நோய்களை நீக்கிப் போற்றுமாறும் இவை போன்றனவுமே பெரும்பான்மையும் புதுமை பயப்பத்தொடர்புறப் எழுதப்பட்டு வருகின்றன. ஆதலால் சீவனோபாய ஏதுவாகிய இப்பத்திரிகை எந்நிலைமையினோர்க்கும் உபயோகப்படுவதேயாகும் என்பதிலையமில்லை. இது ஸ்ரீமான் *J. R.* ரங்கராஜு அவர்களால் நடத்தப்படுகின்றது. எஞ்சியவைமறுமுறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Personal Notes.

### கௌரவ வ. டோ. இராமநாதத்துரை

இக்கல்விக்கடல் கொழும்புக்கானலி லிருந்து இலங்கைக்குவந்து சுயமவர்மத் தியில்வசிக்கும் பெரும் பேறுடையமாயி னேமென மகிழ்வுற்றேம்.

அன்னவலையை யார்வீசினலும்
அன்னவலையிலரன்படுவானே.
என்பது திருமந்திரம்

### யாழ்ப்பாணம் சித்தங்கேணி ஸ்ரீமான். கா. வயித்தியலிங்கம் பிள்ளையவர்கள்.

இவர்தருமசிந்தனைகுடிகொண்ட ஓர் அவதாரபுருடோத்தமர். யாழ்ப்பாணம் குத்தகைகாறராகிய இவ்விரவலர்புரவலாளரால் எமதுசக்கரவர்த்தியாரவர்கள் கிரீடதாரணமகோத்சவ தினத்திலே யாழ்ப்பாண டிஸ்திறிக்கோட்டுக்குமுன்னிருக்கும் வெளிப்பிரதேசத்திலே அன்னதானஞ்செய்யப்பட்டோர் ஐயாயிரம் என்னும் எண்ணினும், நிஜ்வே மண்டபத்திலே வஸ்திரதானஞ்செய்யப்பட்டோர் ஆயிரம் என்னும் எண்ணினும் அடங்காது அதிகமாவர் எனமதிக்கப்பட்டது.

இவர்கள் தருமத்தினருமையினை மட்டக்களப்பிலே பார்த்திருக்கின்றேம். இங்கே பெரியவீடும் தோட்டமும் விலைக்குவாங்கிச் சத்திரமாக்கப்பட்டிருக்கின்றது. கதிர்காமயாத்திரைகாரர்களுக்கு இன்றியமையாத பேருபகாரம் அவ்விடத்திலிதனினுஞ்சிறந்ததில்லை. இவர்கள் ஆபீசிலே நாடோறும் வரும் யாசகர்கள் எண்ணிறந்தோராயினும் தேகி என்னும் வார்த்தைக்கு இல்லை எனப்படும் வாசகம் நாமங்கிருந்தநாளத்தனையும் கேட்கப்பட்டதில்லை சிலவருடங்களின்முன் மட்டக்களப்பிலே பெருங்காற்றால் தென்னந்தோப்புகள் வேருடன் அழிவுற்றபொழுது இவர்களுக்குற்ற நட்டத்தை மற்றையோர்க்குற்றவைகளோ டொப்பிடின் நட்டமென்பதில்லையென்றே மதிக்கலாகும் "தருமமே தலைகாக்கும்,' என்னும் பழமொழி பழுதுபோமோ.

---

### யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை ஸ்ரீமான். வை வல்லிபுரம்பிள்ளையவர்கள்.

இவர்களால்வண்ணார்பண்ணையிலேபெரியகடைச்சந்தியிலே கட்டுவிக்கப்பட்ட கங்காசத்திரத்திலே மகுடாபிஷேகமகோற்சவக்கொண்டாட்டம் இராசபக்திவளர்ச்சிக்கேதுவாக நடத்தப்பட்டது. சத்திரமும் முன்னையினும் காட்சிக்கனியதாய் விளங்கவும்வந்து தங்குவோர்பலர்க்கு முபயோகமாகவும் சிலபாகங்கள் புதுக்கியும் சேர்த்தும் கட்டப்பட்டு அத்தினம் நிறைவேறியது. பின் ஷெ தினத்தன்று சத்திராலங்காரங்கள் சென்றுநோக்கினர் கண்களெல்லாம் கொள்ளைகொள்ள, மங்கலவாச்சியங்களின் முழக்கம், சென்றுநோக்காதார் செவிப்புலன்களை எல்லாம் தன்மயமேயாக்கி மகுடாபிஷேகமகோத்சவ ஞாபகஞ்செய்ய, கொடுக்கப்பட்ட அன்னதானத்தால் பசிப்பிணிநீங்கிய வறிஞர்கள் வாழ்த்தொலி மேலெழாநிற்கு மித்ததாகலத்திடையே, கருணாமூர்த்தியாகிய எமது ஏசண்டரவர்களும்வந்து நாடோறும்வாசஞ்செயதிருந்த கருமதேவதைஅன்றாஎழுந்துநின்றுநடனஞ்செய்யும் அவ்வறச்சாலையினுட்பிரவேசித்து வீற்றிருந்தார்கள். பின்சத்திராதிபதிபால் உபசரிக்கப்பட்டு சக்கரவர்த்தியார் சக்கரவர்த்தனியார்உருவப்படங்களை உள்ளிடமெங்கும் தரிசிக்கப்பெற்றமையினால் வந்துற்ற பேரானந்தப் பெருக்கை மற்றையோர்க்கும்பாகித்து மீண்டார்கள். இப்பிள்ளையவர்களும் தருமநாட்டங்கொண்ட பரோபகார அவதாரம்என்பதை எவரும் அறிவராதலினால் மேல்எழுதாது விடுத்தாம்.

குமாரசுவாமிப்புலவர் நூலகம்
புலவகரகம்,
மயிலணி : : சுன்னாகம்,
இலங்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்புண்ணிய புருடர்களும் இவர்கள் மேற்கொண்டு நடத்திவரும் தருமங்களும் இன்றுபோலென்று மோங்கிவளர்ந்துவர சிவபெருமான் திருவருளைப் பிரார்த்திக்கின்றேம்.

## சமாசாரம்.

வண்ணைவயித்தீஸ்வரன்கோயில்—இவ்வாலயத்திலே உத்சவாரம்பமாகி நடைபெற்றுவருகின்றது.

விவாகம்—வண்கிழக்கு ஸ்ரீ சு. மெய்யப்பபத்தர் அவர்களுக்கும் வண்மேற்கு ஸ்ரீ கும. மாரியப்பபத்தர் அவர்கள் புத்திரிக்கும் விரோதிகிருது ளு ஆனிமீ 22 உ வியாழக்கிழமை விவாகம் மங்கலகரமாக நடந்தது. இவர்களனுட்டானத்திற்காணப்படும் விவாகசம்பந்தமான வைதிகக் கிரியைகளும் வேறுசிற்சில வழக்கங்களும் மிகவும் விசிட்டமுடையன. தம்பதிகள் சர்வாபீஷ்டசித்திகளோடு பல்லாண்டுவாழப் பராபரையாகியராஜராஜேஸ்வரி திருவருளைப்பிரார்த்திக்கின்றேம்.

கொக்குவிலில் ஆங்கிலவித்தியாசாலை—இது இந்து காலீஜின் ஒருகிளைப் பாடசாலை. தூரத்திலிருந்து வரும் மாணாக்கர்களுக்கு இது உபயோகமாகும். இது மேன்மேலும் விருத்தியடையத் தெய்வசகாயத்துடன் பற்பலபிரபுக்களின் திரவியசகாயமும் வேண்டப்படும். இதனிற்சிறந்ததருமம் பிறிதில்லை.

சுடுகாடு:—யாழ்ப்பாணத்திலிருந்து சாவகச்சேரிக்குப் போகும் பிரசித்ததெருவிலே செம்மணி எனப்படுமிடத்திலே. தெருவினிருபக்கங்களிலும் மிகநெருங்க. பிரேதங்கள் தகனஞ் செய்யப்பட்டுவருகின்றன. பிரசித்தபாவனையிலிருக்குமிவ்வழியினால், பகலிலேவரும் சிறுபிள்ளைகளும் இரவிலேவருபவர்களெவர்களும் அச்சத்தாற்பீடிக்கப்பட்டு நடுநடுங்குகின்றார்கள் பிரேதப்புகை பலதொற்றுநோய்களுக்குக்காரணமாகுமாதலினால் இதனையெமது கருணாகரமான அரசாட்சியார் கவனிக்கவேண்டுகின்றேம்.

சங்கிலுள்விடம்:—சங்கிலுள்ளிருக்கும்ஒருவகைச்செந்தவல்லையிலேபொலிகண்டியென்னுமிடத்திலுள்ளஒருவனுடைய கையிலேகடிக்க அன்றே இறந்துபோயினனாம்.

பிரேதம் கல்லாகமாறியது:—இத்தாலிய நகரிலே, ஓரிடத்தே வெட்டியபொழுது கல்லுருவாய் மாறியிருக்கும் ஒரு பெண்ணின் தேகம் காணப்பட்டது. கைகால் முதலிய அவயவங்களிலே அணியப்பட்ட ஆபரணங்கள் எல்லாம் அப்படியே இருக்கின்றனவாம். அந்நிலத்திற் கலந்திருந்த பூதியங்களினியல்பே. இவ்வாறு உடலினைக்கல்லாக மாற்றிய தெனச்சாஸ்திரிகள் கூறுகின்றார்கள்.

பழையநாணயம்:—மைசூர் சமஸ்தானத்தைச் சேர்ந்த சித்திரதுர்க்கத்தருகிலுள்ள சந்திரவள்ளி எனும் பூமியைச் சோதனைசெய்தபொழுது முற்காலத்து வழங்கிய பழையநாணயங்கள் அகப்பட்டன. இதனால் சீனாவுக்கும் இந்தியாவுக்கும் அதிகசம்பந்தமிருந்ததாகத் தெரியலாம்.

ஜேர்மன்வெள்ளி:—நல்ல செம்பு 50 நாத்தல்; துத்தநாகம், 20 றாத்தல், வெள்ளிப்பித்தளை சுத்திசெய்தது 10 றாத்தல் இம்மூன்றையுஞ் சேர்த்து உருக்கினால் ஜேர்மன் வெள்ளியாகும்.

போலிவெள்ளி:—தகரம்-3 அவுன்ஸ். செம்பு 4 றாத்தல் இவ்விரண்டையும் சேர்த்துருக்கினால் வெள்ளிபோல் நிறமுடையதாகும் பாத்திரங்களும் நகைகளுஞ் செய்யலாம்.

காலையிலெழுதல்:—பிராமிமுகூர்த்தத்திலெழுபவர்தீர்க்காயுளைடைவர் [ரொ] பண்டிதராவரென ஒருதத்துவ சாஸ்திரி கூறுகின்றார்.

கனா:—இங்கிலாந்திலே ஒருத்திக்கு இரண்டு மாசக்குழந்தை இருந்தது, இவளின் தாய் ஒருநாளிரவிலே தான் வளர்த்துவந்த ஒரு குழந்தை இறந்ததாகக் கனாக்கண்டு தன்மகளினது குழந்தையிற் சந்தேகமுற்று, மகள்வீட்டிற்குப் போய்ப்பார்த்தபொழுது, அக்குழந்தை இறந்து கிடந்ததாம். எம்மதத்தினர் எழுதிய "கனாநூலை" ப்பரிகாசஞ் செய்பவர்கள் இதற்குயாது கூறுவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரியபுராணபடனம்:—இந்த ஆனி மீ தொடக்கமாக வண்ணார்பண்ணை ஆறுமுகநாவலர் வாசிகசாலையில் வித்துவசிரோமணி ஸ்ரீமத் ந. ச. பொன்னம்பலபிள்ளை அவர்களின் மருகரும் மாணாக்கருமாகிய ஸ்ரீமத். சிவ மாரிமுத்துஉபாத்தியாயர் அவர்களால் பெரியபுராணபடனஞ் செய்யப்பட்டு வருகின்றது.

விஷமேறாதமிருகங்கள்:—கீரி, தக்கு (ஓர்விதமிருகம்) பூனை முதலியனவாம். மனிதருள்ளும் சில சிறுவிஷங்கள் ஏறப்பெறாதவர்களுமுளர்.

சூரியன்:—பூமியிலும் பன்னிரண்டரை லக்ஷம் அளவுபெரியது சுற்றளவு இருபத்தெட்டு லக்ஷம் மைல் குறுக்களவு 904 000 மைல். 9 கோடியே 20 லக்ஷம் மைல் பூமிக்கும் சூரியனுக்குமுள்ள தூரம்.

உப்பு:—உணவில் உப்புக்குறையின் அஜீரணமுண்டாகும்.

மனைவிக்குரிமை—நாயகன் வீட்டிலே வேறொருத்தியைக் கூடவைத்திருந்தாலே, மனைவிவேறுவீடுகேட்க, அல்லது தாபரித்துக்கொள்ளும் பொருள்கேட்க அமையும் என்று இந்தியாவிலே விதிக்கப்பட்டிருக்கின்றது.

பெரியஇலை—அமெஸான் நதிக்கரையிலே ஒருவித மரஇலை இருக்கின்றது நீளம் 50 அடி அகலம் 12 அடி இவ்விலையின்பெயர் இஞ்ஜ என்றழைக்கப்படும்.

ஒருபுதியதுப்பாக்கி—நியூயோர்க்கில் ஒரு துப்பாக்கிகண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றது மேன்மாடங்களுள்ள வீடுகள்மேல் தீபற்றியபொழுது, அதனைச்சுட்டால் ஓர் மெல்லியநூல் அதன்வழியாகச் சென்று அதனிறுதியில் ஒரு வலிய கயிறு கட்டப்பட்டிருக்கும் அதனை வீட்டிலுள்ளவர்கள் இறவாது இறங்கக்கூடுமாம்.

இந்தியாவில் ஒருசட்டம்—வைத்தியரிடத்தில் இவர்சுகத்திதியுள்ளவர், விவாகஞ்செய்துகொள்ளுதற் குரியவர் என்று அதிகாரப்பத்திரம் பெற்றுக்கொண்டபின்தான் விவாகஞ்செய்யவேண்டும். இதுஎம்மூரிற்குமவசியம். இளமையில் பிறரறியாது பயின்றுவந்த துர்ப்பழக்கங்களால் வீரியமிழந்திருந்தி இருப்பவரும், சிலநோயாளரும், முதுமைப்பருவமுடையோரும் விவாகஞ் செய்துகொள்ள வெட்கமின்றி முயலுகின்றார்கள். முயன்றவாறேசெய்தபின் அதனாற்பல தீமைகளு முண்டாகின்றன ஆதலினால்.

(!—ர) [illegible]

[illegible]

எலிப்பல்—எலியின்பற்கள் வளர்ந்துகொண்டே இருக்கும் அதையிடையிடையே அராவிக்கொண்டிராவிட்டால் அதுநீண்டுவளர்ந்துவிடும். ஆதலாற்றான், வயிறு நிறைந்தபின்னும் சும்மாயிராது, கல், கதவு, கந்தைத்துணி, முதலிய பொருள்களைக் கடித்துக் கொண்டேயிருக்கின்றன என ஒருசாஸ்திரி கூறுகின்றார்.

ஒருபுதியகயிறு:—அவுஸ்திரேலியாக்கடலிலே (Posidonia Australia) எனப்படும் ஓர்வகைக்கயிறு அகப்படுகின்றது தீயினுலெரிவதில்லை. தலையணைமெத்தை காகிதம் முதலியனசெய்தற்கு உபயோகமாகும். இழையுடன்சேர்த்துச் சீலை நெய்யவும் உபயோகிக்கப்படுகின்றது.

தாமரையிலை—சுவர்க்குள் வைத்துக்கட்டும் மரத்தினவ்வளவுபாகத்திலும் தாமரையிலைகளைச் சுற்றிவைத்துக்கட்டினுல்மரம் உளுப்பதில்லை. எம்மூர்ப்பழையகட்டிடங்களிலே இன்றுங்காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெட்ரிகுலேஷன் பரீக்ஷை:- இவ்வருஷத்திலிப்பரீக்ஷையிலே P ருக்குமணி அம்மாள் அவர்கள். H ருக்குமணி அம்மாள் அவர்கள் திவான் பேஷ்கார் P. ராமகிருஷ்ணையரவர்கள் தருமபத்தினி ஸ்ரீமதி. அம்மையாப்பாள் அவர்கள். என்னும் இப்பிராமணப்பெண்கள் மூவருஞ்சித்திபெற்றனர்.

பல்லில் வைரமிட்டிழைத்தல்:—நியூயோர்க்பட்டணத்தில், மிஸ்- பிளாரென்சுவார்டு என்னுமோர் மாது. முக்கால் கரெட்டு நிறையுள்ள வைரவிரத்தினமொன்றை, தனது முன்பல்லில் இழைத்திருக்கின்றார். நமது தேயமாதரும் முற்காலத்திலே இவ்வாறு செய்திருந்ததாக இலக்கியங்களிலே கேட்கப்படுகின்றது.

இளமையில் பற்கள் வீழ்வு:—இளமையிலே பற்கள் விழுவது அதிக இனிப்புள்ள பொருள்களை உண்பதினாலென்று ஒருவர் கூறுகின்றார். ஒருபல்லை, சர்க்கரை கலந்த நீரிலிட்டுக் கொதிக்கவைத்தப்பின் அதை நெரித்தால் பஸ்மமாகப் போகின்றதாம்.

ஆகமபாடசாலை:—கும்பகோணத்தில், திவான்பகதூர் R. ரகுநாதராவ் அவர்களால் ஆகமபாடசாலை தாபிக்கப்பட்டிருக்கின்றது. ஆலயங்களுள் சைவர்களுக்கே பலிந்தனம் பூரிவிப்பாடசாலை ஒன்றாயினுமில்லாமை பெருங்குறையே. நமது கோயிலாதீன கர்த்தர்கள் எல்லாருங்கூடி ஒரு ஆகமபாடசாலை தாபித்துக் கற்றுத்தேறியவர்களையே, குருக்களாக ஏற்றுக்கொள்ள வேண்டும். அல்லாதவர்க்குத் தானதக்ஷிணைகள் கொடுக்கப்படாது என்கட்டுப்பாடு செய்தலும் வேண்டும். இது இன்றியமையாதது.

அம்மைநோய்—யாழ்ப்பாண நகர்ப்புறத்தே அக்காலத்திலே கட்டப்பட்டிருந்த வைசூரி வைத்தியசாலையினைச் சூழ்ந்து சூழ்ந்து வலைக்குடியேறி வருகின்றமையினால் அதனைச் சூழவிருக்குங் கிராமங்களிலே இந்நோய் விட்டு நீங்காதிருக்கின்றது என எண்ணப்படுகின்றது.

பசுக்கொலை:—தோட்டத்திலே பயிரைமேயின் பசுவைப்பிடித்துக் கட்டி அரசாட்சியாரிடம் ஒப்புவித்தலே முறை அவ்வாறன்றிக் கற்களாலும் ஆயுதங்களாலும் எறிபவர் இம்மையிலும் தண்டிக்கப்பட்டு மறுமையிலும் நரக வேதனையுறுவர். கோண்டாவிலிலே ஆயுதத்தாலெறிந்து பசுவினைக் கொன்ற ஒருவனுக்கு டிஸ்திரிக்ட் நீதிபதியால் பசுவின் சொந்தக்காரனுக்கு 4 ரூபா கொடுக்கவும் அரசாட்சியாருக்கு 35 ரூபா கொடுக்கவும் விதிக்கப்பட்டது

தேன்:—சீனர் இலங்கைப்பழத்தினின்றும் தேன் எடுக்கின்றார்களாம்.

காகிதம்:—சோளத்தட்டைக்கோல், மலைப்புல் அவன்வேர் மூங்கில் பருத்திச்செடிக்கட்டை ஆகிய இவைகளினின்றும் காகிதஞ்செய்யக்கூடும்.

பெண்கள் பிரசுரஞ்செய்வன:—பெண்களால் பிரசுரமாகும் மாதாந்தப் பத்திரிகைகள் உலகிலே 200 எனக் கணக்கிடப்பட்டிருக்கின்றன.

வைத்தியர்கள் செய்யுமுறுதி—துருக்கியிலே வைத்தியர்கள் "செல்வர்களும் வறிஞரும் ஒரேகாலத்திலழைப்பின் வறியவர்களுக்கு முற்பட்டவிடத்திற்கே போவேன்; பகலிலாயினும் இரவிலாயினும் இறுதி தருணத்தி நோயாளரிறக்கும் காலமாயினும் நான் ஒன்றையும் நோக்காது வியாதியாளரைப் போய்ப்பார்ப்பேன்" என உறுதிசெய்யவேண்டும்: அதன்பின் அதிகாரப்பத்திரம் கொடுக்கப்படும்.

---

தண்டிகைச் சரசம்:—இது வண்ணை வைத்தீஸ்வரன்கோவிலில் சிவனியாரால் வருஷத்திலாறாவது திருநாளாதல். சிவபெருமானுக்கு ஆட்டப்பட்ட வண்ணைப் பொன்னூஞ்சல் என்று அழைக்கப்படும் சுக்காசனமானால். வருடந்தோறும் நடத்திவரும் இவ் திருநாளுக்கிதற்காகப் பெரும்பொருள் செலவிட்டு தண்டிகை பொன்னும் பணமும் நட்சத்திரங்களின் அமைவும் முறையும் பிழையாவண்ணம் செய்வித்து இம்முறை கொடுக்கப்பட்டது. இத்தண்டிகை வேலைகளின் பொருட்டு வேண்டப்படும் விலையுயர்ந்தபொருள்களை சென்னையினின்றும் தருவித்து. பணத்திறங்களின் போக்குவரத்துக்களையும் இவைகளையும் உபயோகமுறைகளையும் நன்குணர்ந்து வெளித்த [illegible] அனுபவ அறிவின் துணைமையினால் வேலைகளை நடத்தியும் நடாத்தி தம் உதவிய சு வீராச்சாமி என்பவருக்கு கோவில் ஆதீனகர்த்தர் ஸ்ரீமான் க பொன்னுச்சாமி செட்டியாரவர்களால் இம்முறை திருவாதிரைத்திருநாளில் சுவாமி சந்நிதானத்தில் கூடியிருந்த பெரியோர்கள் சபையில் தங்கக்கைக்காப்பு ஒன்று பரிசாகக் கொடுக்கப்பட்டது. தண்டிகையின் வேலைப்பாடுகளை அறிந்தோர் எவரும் வியந்து பாராட்டினார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அசாதி ரோகங்களுக்கு பிரதிக்ஷ

## அவுஷதம்.

### கஸ்தூரிதிராவகம்.

இந்தத் திராவகத்தில் ஒருநேரத்துக்கு மூன்று சொட்டுவீதம் ஒருஓயின் கிளாஸ் தண்ணீரில்விட்டு காலை, மாலை, இரவு படுக்கும்நேரம் சாப்பிட்டால் எப்பேர்ப்பட்ட நீர் அலிவினால் தாங்க முடியாத வருத்தத்தை மூன்றுநாளையில் சுகமாக்கும். 40-நாள் மருந்து சாப்பிட்டால் வியாதி நன்றாய்ச் சொஸ்தமாகும். தருணவயதுள்ளவர்களுக்கு உண்டான பக்க வாய்வு துர்சடத்தையால் ஆண் தமை பலமற்று சையோகம்செய்ய இயலாதவர்களுக்கு தாள்களுக்குச் சாப்பிடமேற்படி திராவகமும் ஆறுதுடம்பில் பூச துஜ்ஜிபங்கதைலமும் எடுத்து உபயோகிக்க வேண்டியது. இன்னும் மேற்படி திராவகமானது இருமல், மூலச்சூடு, காசரோகம். அடங்காட்டென்ற வாதரோகம், தலைச்சுற்று மூளை பலவீனம் ஞாபக சக்திக்குறைவு, கண்புகைச்சல் பார்வைக்குறைவு காட்சென்றபிரமேகம் இவைகளுக்குக் கைகண்ட ஔஷதம். இந்தமருந்திலே கஸ்தூரி தங்கபஸ்பம், அப்ரகபஸ்பம், சாப்பிராணிப் பதங்கம் வேறு மூலிவகைகளும் சேர்த்து திராவகம்வடித்துவைத்திருக்கிறேன். இந்த மருந்துகளெல்லாம் சேர்க்கப்பட்டிருப்பதனால்தான் இது சீக்கிரம் சுகமடைவிக்குமென்று கூறுகிறேன். இந்த மருந்தைக்கொடுத்து அனேக பிரயாணிகளைச் சுகப்படுத்தி விலையுயர்ந்த வெகுமதிகளும் பெற்றிருக்கிறேன் இப்போது எல்லாருடைய பிரயோசனத்துக்காக சொற்பசெலவெடுக்க வெளியே பிரசித்தம்பண்ணிவருகிறேன். பித்தபாண்டு மகோதரம்; காய்ச்சல் கட்டி, வயிற்றிலிருக்கும் துர்நீர்களுக்கு கைகண்ட ஔஷதம். விலை அரை அவுன்சுக்கு ரூ. 10 இதற்குக் குறைந்துஅனுப்படமாட்டாது. தபாற்செலவு பிரத்தியேகம்.

### துஜ்ஜிபங்கதைலம்

சிலர் தம் இளம்பிராயத்தில் புத்திஈனமாய் இந்திரியத்தை தம்கையால் பழுதாக்கிக் கொள்வதால் இலகானைக்குப்புன் நரம்புகள் பழுதுபட்டு ஆணுடம்பு பெலனற்றுச் சுருண்டுசிறிதாய்ப்போய் இந்திரியம் குறைந்தும், துர் ஸ்திரி சையோகத்தால் அநேக உஷ்ணமான மருந்துகள் சாப்பிட்டு பெலனற்றுப்போகின்றார்கள் இப்படிருவருகையுள்ளவர்கள் மனக்கவலையுடன் வியாதியை ஒருவருக்கும் சொல்லாமல் வெட்கப்பட்டு இருப்பார்கள் அவர்கள் இத்தைலத்தை ஆண் உடம்பிற்பூசி உள்ளுக்கு கஸ்தூரித்திராவகமும் சாப்பிட்டால் ஆண் உடம்பு சரியான நிலைமைக்குவந்து பலப்பட்டு இந்திரியம் விருத்தியாகி 44 தினத்துக்குள் வியாதி சகப்படும், 21-நாள் தைலம் பூசி மேற்படி திராவகம் சாப்பிடுவோரல் வியாதியின் சுகந்தெரியும். ஒரு அவுன்ஸ் தைலத்தின் விலை ரூ 2. அணா 8. தபாற்செலவு பிரத்தியேகம்.

### வீரியஸ்தம்பனக்குளிகை.

ஆச்சரியம்! மிக்கஆச்சரியம்!! ரோகமற்றவர்களுக்கு ஒரேகுளிகையில் தெரியும். இந்தக்குளிகை (இந்திராசனம்) ஒருநாளில் ஆயிரம் ஸ்திரீக்ளைச் சம்போகிக்கிறதாக உண்டாக்கப்பட்டது. இதைச் சிலர் சாமாகிரத்தில் சொல்லியபிரகாரம் செய்யாமல் சொற்பகிரயத்திற்கு விற்பனைசெய்துவருகிறார்கள் அநேகச் சனங்கள் பெற்று அதிலே சொல்லிய காரியங்கள் முழுதும் விருத்தியாகப்பட்டு ஏமாந்துபோகிறார்கள்! ஆதலால் சாஸ்திரப்படி அதிக பொருள் செலவழித்துச் செய்கிறவர்களிடம் பெறப்பிரியப்படுகிறார்கள் இது உலகவிபரீதம். இதில் முக்கியமாயறியவேண்டிய காரியம் யாதெனில், இதன் முழுக்காலமும்!கொடுத்து எடுத்துஒருகுளிகையாற் சுகமறியலாம்காரியமும் விளக்கும். இதைப்பற்றி அதிகமாகச் சொல்லத்தேவையில்லை. 12-குளிகைகளுக்குக் குறைய அனுப்பப்படமாட்டா. பரீட்சிக்கவர்களை இதன்சுகத்தை அனுபவிப்பார்கள் 12-குளிகைகளின் விலை ரூபா 2. தபாற்செலவு அணா 4

சாப்பிடும்விதம்—சையோகஞ்செய்ய அரைமணித்தியாலத்துக்குமுன் ஒருமாத்திரையைச் சாப்பிட்டவுடன் காய்ச்சிய பசுப்பாலில் கற்கண்டுபோட்டுக்குடித்தால் இந்திரியம் இளகாது இளகவேணுமானால் எலுமிச்சம்பழம் சாப்பிடவும்,

கெங்காதரர் தைலம்:—அண்டவாய்வுக்குக் கைகண்ட உண்மையான மருந்து இதன் விலை அவுன்சு ரூபா 5.

மகாநாராயண்தைலம்:—வாய்வுகள் கபாலபீனிசம் முதலானதுக்குக் கைகண்டது 1 அவுன்சு ரூபா 1 மேற்கண்ட மருந்துகளுக்கு தபாற்செலவு பிரத்தியேகம்.

### மிருத்துச்சீவன் அல்லது

### கஸ்தூரிமாத்திரை.

எட்டுவிதமான சுரத்துக்கும். அசுத்தசலத்தினால் கொசுமுதலான விஷசெந்துக்களி [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலேரியா ஆகிய விஷக்காய்ச்சல்களுக்கும் 18-விதமான சன்னிக்கும் இதில் ஒருமாத்திரையை இஞ்சிச்சாற்றி லுரைத்துச் சாப்பிட்டால் எப்பேர்ப்பட்டசன்னியும் ஒரு அல்லது இரண்டுவேளை மருந்திற் சுகமாகும். ஏழுவேளைசாப்பிட்டால் சன்னி காய்ச்சல் சுரம் முதலியன சுத்தமாய்ச் சுகமாகும். 12 குளிகையின் விலை ரூபா 2.

## காமனீமது பஞ்சனீ மாத்திரை

இது தங்கம்; அபரக்பஸ்பம்: கஸ்தூரி. குங்குமப்பூ. லிங்கசெந்தூரம் முதலிய விலையுயர்ந்த மருந்துகள் சேர்த்துச் செய்யப்பட்டுத் தயாராயிருக்கிறது இதன் சொற்பகுணத்தைமட்டும் காட்டுகிறேன். நீரிழவு காசம் இருமல் சுவாசம் நீர்தவாத ரோகம் பிறமேகம் மூலக்குடு புதிதாய்க்காணும் அண்டவாதம் வெள்ளைமுதலிய வியாதிகள் தீர்ந்து தாதுபுஷ்டியுண்டாகும். மூன்றுநாளில் நல்லகுணந்தெரியும் 44-நாளில் வியாதி பூரணசுத்தமாகும். காலை மாலை 14-நாள் சாப்பிடக்கூடிய 28-மாத்திரைகளின் விலை ரூபா 5. 44-நாள் சாப்பிடக்கூடிய 88-மாத்திரைகள் எடுத்தால் ரூபா 13-க்குக் கொடுக்கப்படும். தபாற்செலவு பிரத்தியேகம்.

## சந்திரிக்கா பிரதம மாத்திரை.

இத்தமாத்திரை காசம் பவுத்திரம் அண்டவாய்வு பக்கவாய்வு பித்தபாண்டு வெள்ளை நீர்க்கடுப்பு நீரடைப்பு மீன்சங்கபாலம் துர்ஸ்திரீ சம்மனத்தாலுண்டான நோய்கள் வெண்குட்டம் கிரந்திவு போகத்தாலுண்டான நோய்களையெல்லாந் தீர்க்கும். இம்மாத்திரையை 21-நாள் சாப்பிட்டால் பூரணசுகமுண்டாகும். மருந்தெடுக்கும்போது வியாதிக்கேற்ற அநுமானம் தெரிவிப்போம். 44-குளிகையின்விலை ரூபா 3. சதம் 50.

## புத்தகங்கள்.

பின்னுற் காட்டப்பட்டிருக்கும் அருமையான புத்தகங்கள் மானிடர்எவரும் இகபரநன்மைகளைக் கருதி அவைகளைக் கைப்பற்றிக்கொள்ளக் கடமைப்பட்டிருப்பதால் இவ்விரு விஷயங்களுச்கும் குருவைப்போற் போதிக்கக்கூடிய மெத்த அருமையானபுத்தகங்களானதால் ஒவ்வொருவரும் இவைகளைக் கட்டாயம் வாங்கிவாசிக்கவேண்டியது.

இவைகள் செந்தமிழ் அலங்காரநடையில் எவரும் வாசித்தறியக்கூடிய வெள்ளைமொழிகளா லியற்றப்பட்டு வாசிப்போர்க்கு இன்பத்தையும் மனோற்சாகத்தையும் கொடுக்கக்கூடியவைகள், சொற்பபிரதிகள்தான் இருக்கின்றன. காலதாமதஞ்செய்யவேண்டாம்.

| | |
|---|---|
| க. சோகசாஸ்திரம் மாபிள்கட்டு ஒருபிரதி ரூபா | 3 |
| உ. கலிக்கோ ,, | 4 |
| ங. கைத்தொழிற்போதினி மாபிள்கட்டு ,, | 1-8 |
| கலிக்கோக்கட்டு ,, | 2 |
| ச. பூலோகௌஷதோபகாரி வாணவேடிக்கைகள் அடங்கிய பக்தாம்சங்கியை 1-க்கு அணா | 10 |
| ரு. அனேக இங்கிலீஷ்ச்சாமான்களடங்கிய ஒன்பதாம் சங்கியை ஒன்றுக்கு அணா | 12 |
| சு. சோகன்லால் சரித்திரம் ,, | 8 |
| எ. இன்ஸ்பெக்டர் சீபுசாய்புசரித்திரம் ,, | 12 |
| அ. டை சரித்திரமும் சோகன்லால்சரித்திரமும் ஒரேகட்டிடம் ஒன்றுக்கு ரூ. | 1-4 |
| கூ. ருஷியஜப்பானியயுத்தம் இருபகுதிகள் ரூ. | 1-00 |
| ய. இரசமணிசெய்யும் புத்தகம் (அ பக்கம்) ரூ. | 1-8 |

மேற்காட்டியவைகள் வேண்டுவோருக்கு தாமதமின்றிச் சாக்கிரதையோடு அனுப்பப்படும் தபாலில் வேண்டுவோருக்கு தபாற்செலவு பிரத்தியேகம் மற்ற விபரங்களுக்குக் காட்லாக்கை யெடுப்பித்துப்பார்க்கவும். இனாமாக அனுப்பலாம். ஒருமுறை இப்பொருள்களை வாங்கி, தினமும்மகிழ்வடையுங்கள்.

எமதுவிலாசம்.

மகாராஜ கேங்காப்பிரசாத் பண்டிதர்
மருதானை முதலாம் டிவிசன் No. 74.
கொழும்பு.

## அரியபிரதிமைப்படம்.

ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுகநாவலரவர்களின் மருகரும் மாணாக்கருமாகிய வித்துவசிரோமணி ஸ்ரீமத். ந. ச. பொன்னம்பலபிள்ளை அவர்கள் சித்திரப்பிரதிமைப்படம் (*Portrait*) எமது ஞானப்பிரகாச ஆபிசிலும், வண். கிழக்கு நாஷனல் ஸ்ரோர் எஸ் வீ. எஸ். வீராச்சாமிப்பிள்ளையிடத்திலும்விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம். ஸ்ரீமான். எஸ். கே (மோற்றசன்) கனகரெத்தினம் அவர்களால் அமைக்கப்பட்டது.

**Do you wish to learn**
*Hypnotism, Mesmerism, Mind Reading, Clairvoyance &c?*
*Then apply to The Latent Light Culture,*
Tinnevelly.

*Printed and published by the Proprietor A. Sanmugaretna Sarma at the Genasa Press, Jaffna,*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்துஸ்தான் சகாய வீமாச்சங்கம் (லிமிற்றட்)

கஅஅஉ ம் வருஷத்து இந்தியசங்க சட்டப்பிரகாரம் இச்சங்கம் பதிவுசெய்யப்பட்டது.

இதற்கு மூலதனமாக ஒருகோடி ரூபா அநுமதிசெய்யப்பட்டிருக்கின்றது.

இதன் தலைமை அதிகாரசாலை கல்கத்தாவிலே டல்ஹவுஸி சந்தி ௩0 ம் நம்பர் கட்டடம்.

சபாநாயகர்

காஸிம்புசார் மகாராஜா மணீந்திரசந்திர நந்திபகதூர்

உப சபாநாயகர்கள்

க. நாட்டோர் மகாராஜா ஜகதிந்தரநாதருய் பகதூர்.

உ. தீகபட்டியாராஜா பிரமாதநாதருய்.

☞ இந்தச் சங்கத்தில் நூறுரூபா முதற்கொண்டு எவ்வளவு பெருந்தொகைக்கும் பொருந்திக்கொண்டு அதற்குரிய விதப்படி கட்டிவரலாம். மற்ற வீமாக் கம்பனிகளைப் பார்க்கிலும், இந்தச்சங்கம் விசேஷ அநுகூலமுடையது. இந்தச்சங்கத்திலே கட்டுகிற காசு சிலகாலங்களிற் கட்டத்தவறினும் நட்டமாகாது. மற்றக் கம்பனிகளைப்பார்க்க இச்சங்கத்தினது கட்டுவீதம் மிகச் சகாயமானது.

எஸ். கே. லோட்டன் அன் கோ.
இலங்கை ஏசண்டு
பறங்கித்தெரு
யாழ்ப்பாணம்.

## பத்திரிகைவேதனம்.

| | ரூ. | ச. |
|---|---|---|
| உள்ளூருக்கு வருஷம் க-க்கு | உ | 00 |
| இலங்கை இந்தியாவுக்கு வருஷம் க-க்கு ... ... | உ | உ௫ |
| பினங்கு சிங்கப்பூர் வருஷம் க-க்கு | உ | ௩அ |
| மோரீஸ் நெட்டால் வருஷம் க-க்கு | ௩ | 00 |
| தனிப்பிரதி ... ... | | உ0 |

☞ கையொப்ப நேயர்கள் பத்திரிகை வேதனத்தை முற்பணமாகஅனுப்பி உதவி செய்யும்படி வேண்டுகின்றோம்.

## விளம்பரவேதனம்.

| | ரூ. | ச. |
|---|---|---|
| வரி க-க்கு ... ... | | அ |
| கார்பத்திக்கு ... | க | 00 |
| அரைப்பத்திக்கு ... | உ | 00 |
| ஒருபத்திக்கு ... ... | ௩ | ௫0 |
| ஒருபக்கத்துக்கு ... | ௬ | 00 |

கணேசயந்திரசாலையில் விலைக்கிருக்கும் புத்தகங்கள்.

| | ரூ | ச |
|---|---|---|
| திரிகோணாசலபுராணம் | 0 | எ௫ |
| இரகுவம்சம் (செய்யுள்) | க | எ௫ |
| நல்லைவெண்பாமூலம் | 0 | க0 |
| யாழ்ப்பாணச்சமயநிலை | 0 | க0 |
| விரோதிகிருது வருஷ திருக்கணிதபஞ்சாங்கம் | | உ௫க |
| வாக்கிய ,, (தமிழில்) | 0 | உ௫ |
| ஷை (இங்கிலீசில்) | | ௫0 |
| திருவூடல் | 0 | ௫ |
| ஆறுமுகசாமிவிருத்தம் | 0 | ௩ |
| எட்டிகுடிபேசல் | 0 | ௩ |
| நடராசப்பத்து | 0 | ௩ |
| அநுட்டானவிதி | 0 | ௬ |
| சேதுபுராணவசனம் | க | 00 |

ஆ. சண்முகரத்தினசர்மா
வண்ணார்பண்ணைப்போஸ்டு
யாழ்ப்பாணம்.

## விக்கிரய புத்தகம்.

| | | ரூ. சதம் |
|---|---|---|
| க. | தண்டியலங்காரப்புத்துரை | க—00 |
| உ. | யாப்பருங்கலக்காரிகைப் புத்துரை | க—00 |
| ௩. | சூடாமணிநிகண்டு கஉ தொகுதி க-வது உ-வது சொற்பொருள் கஉ-வதுஉரை | க—00 |
| ௪. | இதோபதேசம் | அ—0 |
| ௫. | நீதிநெறிவிளக்கப்புத்துரை | 0—௩௬ |
| ௬. | திருவாதவூரர்புராணமூலம் | 0—உ௫ |
| எ. | இலக்கணசந்திரிகை | 0—உ௫ |
| அ. | மேகதூதக்காரிகை | 0—உ௫ |

அ. குமாரசுவாமிப்பிள்ளை
சுன்னாகம்.

தூய்யதோர்மறைகளாலுந் துதித்திடற்கரியசெவ்வேள், செய்யபேரடிகள்வாழ்க சேவலுமயிலும்வாழ்க, வெய்யசூர்மார்புகீண்ட வேற்படைவாழ்க வன்னான், பொய்யில்சீரடியார்வாழ்க வாழ்கவிப்புவனமெல்லாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காசிப்பட்டு பீதாம்பரங்கள்.

சுத்தமானபட்டு] [நாணயமான ஜரிகை.
சகாய விலைகள்.
பிடித்தமில்லாதவைகளைத்
திருப்பிப் பெற்றுக்கொள்ளுவோம்.
கீழே கண்ட பட்டுத் துணிகள்
எல்லா நிறத்திலும் கிடைக்கும்.

பட்டுச்சேலைகள்:—கக-முழம் நீளம் உ-அகலம் விளிம்பும் முந்தியும் ஜரிகை வேலைகளுடன் சாதா விலை ரூபா ௨ முதல் ௬-வரை. அதே மாதிரி சேலை உடலிலும் ஜரிகைப்பூ புட்டா போட்டது ரூபா ௨0 முதல் ௪0-வரை.

ரவிக்கைகள்:—விளிம்பும் முந்தியும் ஜரிகை வேலைகள் உடன் சாதா ரூபா ௨ முதல் அ-வரை.
உடலிலும் புட்டா ஜரிகை பூ வேலை செய்தது ரூபா ௬ முதல் ௨0 வரை.

துப்பட்டாக்கள்:—௯ முழம் உ-அகலம் விளிம்பும் முந்தியும் ஜரிகை வேலையுடன் சாதா ரூபா அ முதல் ௨௫ வரை.

அதே மாதிரி உடலிலும் ஜரிகை வேலைகள் ரூபா க௪ முதல் ௫0 வரை.

சவுக்கங்கள்:—உ½ முழம் நீளம் உ½ அகலம் சுற்று ஜரிகை முதலியவைகளுடன் ரூபா ௯ அ 0 முதல் ௩௫ வரை.

அதே மாதிரி உடலிலும் பூக்கள் போட்டது ரூபா ௯ முதல் ௬0-வரை.

வெண்பட்டு வேஷ்டிகள்:—௯, ௭, அ, ௯ முழம் நீளம் உ½ உ¾ ௬ முழம் அகலம் சுத்த வெண்பட்டு மேல் முந்தி வேஷ்டி மாதிரி சிகப்பு சன்னக்கரை போட்டது விலை ரூபா அ½ முதல் ௨0 வரை அதே மாதிரி வேஷ்டிகள் சிகப்பு சன்னக்கரைக்குப் பதிலாக ஜரிகையால் சன்னக் கரை போட்டது ரூபா ௧௨ முதல் ௬0 வரை.

வேஷ்டி சவுக்கங்கள் உ½×உ½-முதல் சிகப்புக்கம்பிக் கரைபோட்டது ரூபா ௫ முதல் ௪-வரை. ஜரிகைக்கம்பி போட்டது ரூபா ௯ முதல் ௩௫ வரை. படிவெண்பட்டு வேஷ்டிகள் முந்தானைக் கரை போட்டதும் அதே விலைக்குக் கிடைக்கும்.

டட்டேத்தலைக் குட்டைகள்:—௪½+௪½-முழம் சதுரம் மேல்பட்டு ஜரிகை ரூபா ௧௬ முதல் ௨௫-வரை. எல்லாக் கலரிலும் கிடைக்கும் மத்தியில் ஜரிகை புட்டா பூப் போட்டுக் கிடைக்கும்.

சுத்தமான கம்பிளி போர்வைகள்:—௯-முழம் நீளம் ௬ அகலம் எல்லா நிறத்திலும் ரூபா ௫ முதல் அ-வரை.

காஷ்மீர் கட்டளிநயச்சால்வைகள்:—வேஷ்டி அகலமும் எல்லா நிறத்திலும் சாதா ரூபா அ முதல் ௩௫ வரை. படிவுநல் விளிம்பும் முந்தியும் ஜரிகை வேலை செய்தது முனையில் மலர்கள் போட்டது ரூபா ௧0 முதல் ௨0 வரை. ஜரிகையில் அதே மாதிரி வேலை செய்தது ரூபா ௧௨ முதல் ௬0 வரை.

உருத்திராக்ஷங்கள்:—௯-முகம் ௬௬ உள்ள மாலை அறு கட்டி முதல் ரூபா ௫-வரை, ௭, அ, ௯, ௧0, ௧௧, ௧௨, ௧௩, ௧௪, ௧௫, ௧௬ முகம் தனி மணிகள் ரூபா ௫ முதல் ௨௫ வரை. ௧0அ-கொண்ட ஜெபமாலை அறு கட்டி முதல் ரூபா ௫ வரை.

வெள்ளி வர்ணச்சரிகை:—௧ தொ ௧00-க்கு ரூபா ௩, ௨ தொ. ரூபா ௨; ௩ தொ. ரூபா ௨; படி சிறுது ஆனது அதனும் சிறிது நாலுறு.

பேண் சூழ்கைகள் விளையாடும் பித்தளைப் பாத்திரங்கள் செட்:—பித்தளை வெங்கலத்தால் செய்யப், குடம், கரண்டி முதலிய ௩௨ சாமான்கள் அடங்கியது சிறிது ரூபா ௨. பெரிது ரூபா ௪.

நம்பர் தூரி.—மேலை கக்கு ரூபா ௩௫.
நயம்பால்காயம்.—சுத்தமானது தோலா கக்கு அணா ௨.

வி.பி. ஜாக்கிரதையாக அனுப்பப்படும்.
சிங்கப்பூர் பினாங்கு முதலிய வெளிதேசத்தார் ஆர்டருடன் முற்பணம் அனுப்பவேண்டும்.

கடிதங்கள் தமிழில் எழுதலாம்.

விலாசம்:—மானேஜர்,
பட்டு பீதாம்பர கம்பேனி, காசி.

*Manager, Silk Petamber Co*
*Benares City.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org